(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 6(3).]

# பாராளுமன்றம்

## 6 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2012 யூலை 06 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

## 2012 யூலை 17, செவ்வாய்க்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

சுற்றாடல் அமைச்சர்,— கடல்சார் தீழ்ப்புத் தடைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2008 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, கடல்சார் தீழ்ப்புத் தடைச் சட்டத்தின் 7 ஆம் 21 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 51 ஆம் பிரிவின் கீழ் சுற்றாடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2012 சனவரி மாதம் 19 ஆம் திகதிய 1741/19 ஆம் இலக்க அதி விசேஷ வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2012.07.06ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

## 2012 ஓகத்து 07, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1329/ '11

கௌரவ புத்திக பத்திரண,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) மாத்தளை மாவட்டத்தில் யட்டவத்த கம்முல்ல ஹீன் எல பாலத்தை நிர்மாணிப்பதற்காக பல வருடங்களுக்கு முன்பு அடிக்கல் வைக்கப்பட்டது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) இப்பாலத்தை நிர்மாணிப்பதற்காக,

(i) மதிப்பீடு செய்யப்பட்ட பணத்தொகை யாதென்பதையும்;

(ii) இதுவரை செலவு செய்யப்பட்டுள்ள பணத்தொகை யாதென்பதையும்;

(iii) நிதி முதலீடு செய்துள்ள நிறுவனத்தின் பெயர் யாதென்பதையும்;

(iv) வெளிநாட்டு உதவி கிடைத்திருப்பின் உதவியளித்த நாடு மற்றும் பணத்தொகை யாதென்பதையும்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இப்பாலத்தின் நிர்மாணப் பணிகளை ஒப்படைப்பதற்கு கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின் கேள்விப்பத்திரங்களை சமர்ப்பித்த நிறுவனங்கள் மற்றும் முன்வைக்கப்பட்ட விலை மனுக்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) பாலத்தின் நிர்மாண வேலைகளை மேற்கொண்டுள்ள நிறுவனத்தின் பெயர் யாதென்பதையும்;

(iv) இந் நிறுவனத்துக்கு நிர்மாணப் பணிகள் ஒப்படைக்கப்பட்டதன் அடிப்படை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1380/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2011ஆம் ஆண்டிற்கான உலகக் கிண்ண கிரிக்கட் போட்டிகளை இலங்கை இணைந்து நடத்தும் என கிரிக்கட் உலகக் கிண்ண கவுன்சில் எப்போது இலங்கைக்கு அறிவித்தது என்பதையும்;

(ii) உலகக் கிண்ணப் போட்டிகளுக்காக இங்குள்ள விளையாட்டரங்குகளைத் தரமுயர்த்துவதற்குச் செலவழிக்கப்பட்ட பணத் தொகையினையும்;

(iii) விளையாட்டு மைதானங்களைத் தரமுயர்த்துவதற்கும் புதிய கிரிக்கட் மைதானங்களை நிர்மானிப்பதற்கும் ஏற்படும் செலவுகளை அங்கீகரிப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்ட நபர்களின் பெயர்களையும்;

(iv) அங்கீகரிக்கப்பட்ட செலவுடன் மைதானங்களின் நிர்மாணிப்பு இயைபுற்றதா என்பதையும்

அவர் இச் சபைக்கு அறியத் தருவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1870/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— தொலைத்தொடர்புகள், தகவல் தொழில்நுட்பவியல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஸ்ரீ லங்கா ரெலிகொம் நிறுவனத்தின் இணையத்தளத்தின் ஊடான தொலைபேசி அழைப்புப் பிரிவின் (VOIP) ஒரு நாள் வருமானம் மற்றும் மாதாந்த வருமானம் எவ்வளவு;

(ii) இப்பிரிவு தற்போது மூடப்பட்டுள்ளதா;

(iii) ஆமெனில், மூடப்பட்ட திகதி யாது;

(iv) இப்பிரிவை மூடுவதற்கான காரணங்கள் யாவை;

(v) மூடும் சந்தர்ப்பத்தில் இப்பிரிவு பெற்ற இலாபம் அல்லது நட்டம் எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2238/ '12

கௌரவ பி. ஹரிசன்,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) வடமத்திய மாகாண சபை சிறுநீரக நோயாளிகளுக்கு இலவசமாக பகிர்ந்தளிப்பதற்காக தரக்குறைவான நீர் வடிகட்டும் சாதனங்களை முறைசாராத விதத்தில் கொள்வனவு செய்துள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி நீர் வடிகட்டும் சாதனங்களின் கொள்வனவின்போது,

(i) செலவிடப்பட்ட பணத் தொகை மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட நீர் வடிகட்டும் சாதனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) பின்பற்றப்பட்ட கேள்விப்பத்திர நடைமுறை யாதென்பதையும்;

(iii) கேள்விப் பத்திரங்களை சமர்ப்பித்த நிறுவனங்களின் பெயர், முகவரி மற்றும் சமர்ப்பித்த விலைகள் தனித்தனியாக யாதென்பதையும்;

(iv) கேள்விப் பத்திரம் வழங்கப்பட்ட நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) நீர் வடிகட்டும் சாதனங்களின்,

(i) தரம் தொடர்பிலான பரிசோதனையை அரசாங்க நிறுவனமொன்றில் மேற்கொள்ளாது, கொள்வனவு செய்த நிறுவனத்திலேயே மேற்கொள்வதற்கு அங்கீகாரம் பெறப்பட்ட நடைமுறை யாதென்பதையும்;

(ii) பகிர்தளிப்பதை நிறுத்துமாறு கணக்காய்வாளர் நாயகம் உத்தரவிட்டிருக்கையில் தொடர்ந்தும் இவை கொள்வனவு செய்யப்படுகின்றனவா என்பதையும்;

(iii) கொள்வனவிற்கான பணத்திற்கு அங்கீகாரம் வழங்கிய உத்தியோகத்தர் யாரென்பதையும்;

(iv) கொள்வனவானது அரசாங்க நிதிப் பிரமாணங்களுக்கு முரணாக இடம்பெற்றுள்ளதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(v) கொள்வனவு தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2248/ '12

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— பிரதம அமைச்சரும் புத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—(2)

(அ) (i) 2011 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட வேலையற்ற பட்டதாரிகளின் எண்ணிக்கை, இவர்கள் கற்றுக்கொண்டுள்ள பட்டப் பாடநெறி மற்றும் மாகாணங்கள் வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) பட்டதாரிகளின் தொழில் பிரச்சினையை தீர்ப்பதற்காக 2011ஆம் ஆண்டில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) பட்டதாரிகளின் தொழில் பிரச்சினையை தீர்ப்பதற்கு இற்றைவரை மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் போதுமானதல்ல என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், எதிர்வரும் காலத்தில் இதன் பொருட்டு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா

(இ) இன்றேல், ஏன்?

2284/ '12

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வடமாகாண புகையிரத வீதி சீர்திருத்தக் கருத்திட்டம் ஒப்படைக்கப்பட்டுள்ள கம்பனி இச்சீர்திருத்த வேலைகளுக்கு வழங்கியுள்ள மதிப்பீட்டின் மொத்தப் பணத்தொகை யாதென்பதையும்;

(ii) இக்கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட திகதி மற்றும் நிறைவுசெய்வதற்கு எதிர்பார்க்கப்படும் திகதி ஆகியவை யாவை என்பதையும்;

(iii) இக்கருத்திட்டத்திற்கு இந்திய தொழிலாளர்களை சேவையில் அமர்த்துவதற்காக இந்திய கம்பனிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) இக்கம்பனியினால் இந்தியச் சாரதிகளுக்கும் இயந்திர இயக்குநர்களுக்கும் செலுத்தப்படும் சம்பளம் எவ்வளவு என்பதையும்;

(v) இக்கருத்திட்டத்தில் பணிபுரியும் இலங்கைச் சாரதிகளுக்கும் இயந்திர இயக்குநர்களுக்கும் இக்கம்பனி வழங்கும் சம்பளம் எவ்வளவு என்பதையும்;

(vi) இலங்கையின் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் மேலதிக நேர மணித்தியாலங்கள் எவ்வளவு என்பதையும்;

(vii) இந்தியத் தொழிலாளர்களுக்கும் இலங்கைத் தொழிலாளர்களுக்கும் ஒரு மணி நேரத்திற்கு வழங்கப்படும் மேலதிக நேரக் கொடுப்பனவு வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) குறிப்பிட்ட கருத்திட்டத்தில் பணிபுரியும் இலங்கைத் தொழிலாளர்களுக்கு தங்குமிட வசதிகள், துப்பரவு ஏற்பாட்டு வசதிகள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், இவ்வசதிகள் போதியளவு வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

2300/ '12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தற்போது கல்வி அமைச்சுடன் பல்வேறுபட்ட செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள அரச சார்பற்ற நிறுவனங்கள் யாவை;

(ii) கடந்த பத்து வருட காலப் பகுதியில் பெருந்தோட்டம் மற்றும் வட கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் பல்வேறுபட்ட அரச சார்பற்ற நிறுவனங்கள் கல்வி அமைச்சுடன் இணைந்து பல்வேறுபட்ட கருத்திட்டங்கள் மற்றும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் கீழ் நிறைவேற்றிய செயற்பாடுகள் வெவ்வேறாக யாவை;

(iii) குறிப்பிட்ட வேலைத்திட்டங்களின் கீழ் கடந்த பத்து வருட காலப் பகுதியில் அந்தந்த நிறுவனத்தினால் கல்வி அமைச்சுக்குக் கிடைக்கப்பெற்ற நிதிசார்ந்த மற்றும் பொருட்கள்சார்ந்த நன்கொடைகளின் பெறுமதி வருடாந்த ரீதியில் வெவ்வேறாக யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2358/ '12

கௌரவ (அல் ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கிழக்கு மாகாணத்தின் ஒலுவில் பிரதேசத்தில் பாரியளவில் கடலரிப்பு இடம்பெறுகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) இந்நிலைமையை தடுப்பதற்காக மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், என்?

2375/ '12

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை முதலீட்டுச் சபை ஆரம்பிக்கப்பட்ட திகதி தொடக்கம் இதுவரை அதன் கீழ் உள்நாட்டு, வெளிநாட்டு முதலீட்டாளர்களினால் ஆரம்பிக்கப்பட்ட ஆடைத் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) இவற்றில் இன்றுவரை செயற்பட்டுவரும் ஆடைத்தொழிற்சாலைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) இத் தொழிற்சாலைகளின் பெயர்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) முதலீட்டு சபையின் கீழ் ஆரம்பிக்கப்பட்டு தற்போது மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகள் தொடர்பில் அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கை யாது என்பதையும்;

(ii) இத் தொழிற்சாலைகளை மீண்டும் முதலீட்டாளர்களுக்கு வழங்க அரசாங்கம் கருதுவதாயின் அவற்றின் உரித்து கடன்பளு ஊழியர்களின் பிரச்சினைகள் ஆகியவை தொடர்பாக அரசு வழங்கும் உத்தரவாதம் யாது என்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

2387/ '12

கௌரவ அஜித் பி. பெரேரா,— பிரதம அமைச்சரும் புத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காணி சீர்த்திருத்த ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் திரு.லக்ஷ்மன் ஹிரிமுத்துகொடவினால் 2007ஆம் ஆண்டில் ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டதா என்பதையும்;

(ii) இதில் நிபுணத்துவ அறிவுடைய அரச உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனரா என்பதையும்;

(iii) அது அமுலாக்கப்பட்டதெனின், எத்திகதியில் என்பதையும்;

(iv) இன்றேல், இதற்கு முரணான ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டதா என்பதையும்;

(v) அதில் உள்ளடங்கியுள்ள பதவிகள் மற்றும் ஏற்புடைய தகைமைகள் யாவை என்பதையும்;

(vi) அதற்கு அங்கீகாரம் வழங்கியவர்கள் மற்றும் அதைத் தயாரித்தவர்கள் யாவர் என்பதையும்;

(vii) மேற்படி அங்கீகாரம் வழங்கப்பட்டமை தொடர்பிலான காணி சீர்த்திருத்த ஆணைக்குழுச் சட்டத்தின் பிரிவு யாதென்பதையும்

அவர் இச் சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்குறிப்பிட்ட அ(iv) இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையானது,

(i) ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டதா என்பதையும்;

(ii) சமர்ப்பிக்கப்படவில்லையெனின், ஏன் என்பதையும்;

(iii) இது தொடர்பில் தேசிய சம்பளங்கள் ஆணைக்குழுவுடன் இணக்கப்பாடு எட்டப்பட்டதா என்பதையும்;

(iv) இது தொடர்பில் காணி சீர்த்திருத்த ஆணைக்குழுவின் அங்கீகாரம் கிடைத்ததெனின், அதனை பெற்றுக்கொண்ட உத்தியோத்தரின் பெயர் மற்றும் திகதி யாதென்பதையும்;

(v) மேற்குறிப்பிடப்பட்ட (ஆ) (iii) இல் உள்ள இணக்கப்பாடு எழுத்து மூலம் சமர்ப்பிக்கப்பட்டதா என்பதையும்;

(vi) தேசிய சம்பளங்கள் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்க முன்னர் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்படவில்லையெனின், ஏன் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1601/ ’11

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2004.01.01 முதல் இன்று வரை குற்றஞ்சாட்டப்பட்ட பின்னர் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் திரும்பப்பெறப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கையையும்;

(ii) வழக்குகளினதும் குற்றஞ்சாட்டப்பட்டவர்களினதும் பெயர்களையும், அவ்விதக் குற்றப் பகர்வுகள் மேற்கொள்ளப்பட்ட திகதிகளையும்;

(iii) குற்றப் பகர்வுகள் வழங்கப்பட்டமை, பின்னர் அவை திரும்பப் பெறப்பட்டமை ஆகியவற்றுக்கான காரணங்களையும்;

அவர் கூறுவாரா?

(ஆ) (i) ஒரு குற்றப் பகர்வை திரும்பப் பெறுதல் தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு ஏற்படுகின்ற செலவையும்;

(ii) இதுதொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்தின் சார்பாகத் தோன்றிய சட்டத்தரணிகளது பெயர்களையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

1827/ '11

கௌரவ புத்திக பத்திரண,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அநுராதபுர மாவட்டத்தின், ஹொரொவ்பொத்தானையில் அமைந்துள்ள நெடுஞ்சாலைகள் திணைக்களத்துக்குச் சொந்தமான அலுவலகக் கட்டடம் சில ஆண்டு காலமாக அழிவடைகின்றதென்பதையும்;

(ii) மேற்படி அரசாங்க கட்டடத்தை அவ்வாறு அழிவடைய விடுவது தேசிய இழப்பொன்றென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மேற்படி அலுவலகக் கட்டடத்தை புனரமைத்து பயன்மிக்க பொருளாதார பணிகளுக்காக பயன்படுத்தும் திட்டமெதும் இருக்கின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி பொருளாதார செயற்பாடு யாதென்பதையும்;

(iii) அதற்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஒதுக்கப்பட்டுள்ளத் தொகை எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2117/11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பண்டுவஸ்நுவர, மகுலாகம கட்டுபொத்த வீதியைப் புனரமைப்பதற்கு மதிப்பீடு செய்யப்பட்ட பணத் தொகை யாதென்பதையும்;

(ii) புனரமைக்கப்படும் இவ்வீதியின் அகலம் மற்றும் நீளம் யாதென்பதையும்;

(iii) மேற்படி நீளத்தினுள் உள்ள பாலங்கள் எத்தனை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி வீதியைப் புனரமைப்பதற்கு கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின் இதற்குக் கிடைத்த கேள்விப் பத்திர விண்ணப்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இக் கேள்விப் பத்திர விண்ணப்பதாரர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி கேள்விப் பத்திரம் வழங்கப்பட்ட நிறுவனத்தின் பெயர் யாதென்பதையும்;

(v) மேற்படி நிறுவனம் முன் வைத்த கேள்விப் பத்திரத்தின் பெறுமதி யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி வீதியின் வேலைகள் முடிவடையும் திகதி யாதென்பதையும்;

(ii) வேலைகள் முடிவடையும்போது செலவாகுமென எதிர்பார்க்கப்படும் பணத் தொகை யாதென்பதையும்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2307/ '12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) பாடசாலை மதியுரை மற்றும் தொழில் வழிகாட்டி மதியுரை அலகுகள் ஊடாக பாடசாலை கட்டமைப்பினுள் நிறைவேற்றப்படும் கடமைப் பொறுப்பு யாது என்பதை அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) முறைசார்ந்த விதத்தில் மதியுரை மற்றும் தொழில் வழிகாட்டி மதியுரை அலகொன்றைப் பேணிவரும் அரச பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) அந்தப் பாடசாலைகளில் பணியாற்றும் முறைசார்ந்த பயிற்சிபெற்ற ஆலோசகர்களின் எண்ணிக்கை மாவட்ட மட்டத்தில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2376/ '12

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மூடப்பட்டுள்ள 25 கைத்தொழிற்சாலைகள் மற்றும் தொழில்முயற்சி நிறுவனங்களுக்கான முதலீடுகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டு 2011 டிசம்பர் முதல் வாரத்தில் வெளியிடப்பட்ட அறிவித்தல் சம்பந்தமாக முதலீட்டாளர்களிடமிருந்து பிரதிபலிப்புகள் கிடைக்கப்பெற்றுள்ளனவா என்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்ட முன்மொழிவுகள் சம்பந்தமாக அரசாங்கம் தற்போது எடுத்துள்ள நடவடிக்கை யாதென்பயும்;

(iii) மேற்படி கருத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படும் போது முதலீட்டாளர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

## 2012 ஓகத்து 08, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1381/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2011 பெப்ருவரி 19 மற்றும் ஏப்ரல் 2 க்கு இடைப்பட்ட காலப்பகுதியில் நடந்த உலகக் கிண்ண போட்டிகளில் இலங்கை கிரிக்கட் ஈட்டிய இலாபம் அல்லது நட்டம் எவ்வளவு என்பதனையும்;

(ii) பிரதான வருமான மூலங்கள் என்ன என்பதையும் சம்பாதிக்கப்பட்ட மொத்த வருமானம் எவ்வளவு என்பதை தனித்தனியாகவும்;

(iii) விளையாட்டுப் போட்டிகளை நடத்தியதில் ஏற்பட்ட செலவினங்கள் என்ன என்பதையும்;

(iv) போட்டி உரிய கேள்விப்பத்திர நடைமுறைகளை பின்பற்றியும் ஏலவிலை கோரல்களை மதிப்பீடு செய்த பின்னரும்தான் அச்செலவினங்கள் ஏற்பட்டதா என்பதனையும்;

(v) அவ்வாறு இல்லையாயின் எவ்வாறு இச்செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டன என்பதனையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) உலகக் கிண்ண விளையாட்டுப் போட்டிகளுக்கு அன்பளிப்பு நுழைவுச் சீட்டுக்கள் விநியோகிக்கப்பட்டதா என்பதையும்;

(ii) அவ்வாறான நுழைவுச் சீட்டுக்கள் விநியோகிக்கப்பட்டவர்கள் யார் என்பதனையும்;

(iii) அன்பளிப்பு நுழைவுச் சீட்டுக்கள் வழங்கப்பட்ட பெறுமானம் எவ்வளவு என்பதையும்

அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1586/ '11

கௌரவ புத்திக பத்திரண,— உள்ளூராட்சி, மாகாணசபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) (i) எஹலியகொட பிரதேச செயலாளர் பிரிவுக்குரிய சிரிசமன்புர அருவக் ஓயாவுக்கு குறுக்காக உள்ள ஹீன்தெனியாவல பாலத்தின் நிர்மாணப் பணிகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டு பல வருடங்கள் கடந்துள்ளதென்பதையும்;

(i) இதனால் பல கிராமங்களைச் சேர்ந்த மக்கள் கடும் இன்னல்களை எதிர் நோக்குகின்றனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பாலத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட வருடம் யாது;

(ii) இதில் நிர்மாண வேலைகளுக்காக நிதி ஏற்பாடுகளையளிக்கின்ற நிறுவனம் அல்லது நிறுவனங்கள் யாவை;

(iii) ஹீன்தெனியாவல பாலத்தின் நிர்மாணப் பணிகளுக்கு கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டதா;

(iv) அவ்வாறெனின் அந்த கேள்விப் பத்திரங்களை சமர்ப்பித்த நிறுவனங்களின் பெயர்கள் யாவை;

(v) அந்தந்த நிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விப் பத்திரங்களின் விலை மனுக்கள் யாவை;

(vi) கேள்விப் பத்திரங்கள் வழங்கப்பட்ட நிறுவனங்கள் மற்றும் ஏற்புடைய கேள்விப் பத்திரப் பணத்தொகை எவ்வளவு

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) பாலத்தின் நிர்மாணப் பணிகள் இடையில் நிறுத்தப்பட்டமைக்கான காரணங்கள் யாவை;

(ii) பாலத்தின் நிர்மாணப் பணிகளை ஆரம்பிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பாரா;

(iii) அதற்கான நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதா;

(iv) அவ்வாறெனின் அப் பணத் தொகை எவ்வளவு

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1871/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— தொலைத் தொடர்புகள், தகவல் தொழில் நுட்பவியல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) யாழ்ப்பாண ரெலிகொம் கட்டிடத்தை புனரமைப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவு;

(ii) இக் கட்டிடத்தை புனரமைப்பதற்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டிருப்பின் இதற்காக விண்ணப்பித்தவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை;

(iii) கேள்விப் பத்திரங்களின் பிரகாரம் ஆகக்குறைந்த விலை மனுக்களின் கீழ் விண்ணப்பித்தவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை;

(iv) மேற்படி கேள்விப் பத்திரம் வழங்கப்பட்ட நபரின் அல்லது நிறுவனத்தின் பெயர் மற்றும் கேள்விப் பத்திரம் வழங்கப்பட்ட பணத் தொகை யாது;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) தற்போது இக்கட்டிடத்தின் புனரமைப்புப் பணிகள் முடிவடைந்துள்ளதா;

(ii) அவ்வாறாயின் இதற்கு செலவாகிய முழுச் செலவினம் எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1925/ '11

கௌரவ அஜித் பி. பெரேரா,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்கவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) 2008, 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் வீட்டுப் பணிப்பெண்களாக வெளிநாடுகளுக்குச் சென்ற பெண்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி ஆண்டுகளில் வீட்டுப் பணிப்பெண்களாக வெளிநாடுகளுக்குச் சென்ற பெண்களில் காணப்பட்ட தாய்மார்கள் தொடர்பான புள்ளி விபரங்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் வசமுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், வீட்டுப் பணிப்பெண்களாக வெளிநாடுகளுக்குச் சென்ற தாய்மார்களின் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டுக்கமைய வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) பிள்ளைகள் உள்ள பெண்கள் வெளிநாடுகளுக்குச் செல்வதால் இவர்களின் குடும்ப அலகுகளிலுள்ள பிள்ளைகளுக்கு பாதகமான தாக்கங்கள் ஏற்படுமென்பதையும்;

(ii) அரசியலமைப்பின் 27(12) ஆம் உறுப்புரையின் பிரகாரம் அரச கொள்கைகளை வழிப்படுத்துகின்றபோது குடும்ப அலகுகளை பாதுகாப்பதற்கு அரசுக்கு விசேட பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்கின்றாரா?

(இ) ஆமெனில், பிள்ளைகள் உள்ள பெண்கள் பணிப்பெண்களாக வெளிநாடுகளுக்குச் செல்வதை தடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

(ஈ) இன்றேல், ஏன்?

2286/ '12

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரச நிர்வாக சுற்றிக்கை 6/2006 (viii) மற்றும் 2006 வரவு செலவுத் திட்டத்தில் பிரேரிக்கப்பட்டுள்ளவாறு இலங்கை அதிபர் சேவை மற்றும் ஆசிரியர் சேவையிலுள்ளவர்களினதும் நிலுவைச் சம்பளம் செலுத்துதல் தாமதமடைந்துள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில் தாமதமடைந்துள்ள கால எல்லை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) 2012 வரவு செலவுத் திட்டத்தின் மூலமும் 2005.12.31 இற்கு பின்னர் ஓய்வுபெற்ற அதிபர்கள் மற்றும் ஆசிரியர் சேவையிலுள்ளவர்களுக்கு வாழ்க்கைச் செலவுப் படி அதிகரிக்கப்படவில்லை என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) மேலே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விதங்களினாலும் பாதிக்கப்பட்டுள்ள ஓய்வுபெற்ற அதிபர்கள் மற்றும் ஆசிரியர் சேவையிலுள்ளவர்களுக்கு அளிக்கப்படும் நிவாணரங்கள் யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

2305/ '12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கல்வி அமைச்சுக்கு உரித்தான காணிகள் அல்லது கட்டடங்கள் தற்போது வாடகைக்கு அல்லது குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அக்கட்டடங்கள் மற்றும் காணிகள் குத்தகைக்கு விடப்பட்டுள்ள காலவரையறைகள் யாவை என்பதையும்;

(iii) அதன் மூலம் அமைச்சு ஈட்டும் வருடாந்த வருமானம் எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2377/ '12

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது நடைமுறையிலுள்ள இலங்கை முதலீட்டுச் சபை சட்டத்திற்கு அமைவாக முதலீட்டுச் சபையுடன் உடன்படிக்கை செய்துகொண்டுள்ள கைத்தொழில்களை அல்லது நிறுவனங்களை சம்பந்தப்பட்ட முதலீட்டாளர்களுக்கு உரிய அறிவித்தல் விடுக்காமல் அராங்கத்தினால் சுவீகரிக்க இயலுமா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வாறு சுவீகரிப்பதற்கு இடமளிக்கின்றதான முதலீட்டுச் சபையுடன் செய்துகொள்ளப்பட்டுள்ள உடன்படிக்கையில் உள்ளடங்கியுள்ள நிபந்தனைகள் யாவையென்பதையும்;

(iii) முதலீட்டுச் சபையுடன் உடன்படிக்கை செய்துகொண்டுள்ள, ஆயினும் அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்ட ஏதேனும் நிறுவனங்கள் உள்ளதாயின் அது சம்பந்தமாக முதலீட்டுச் சபை மேற்கொள்ளும் நடவடிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2611/ '12

கௌரவ (அல்ஹாஜ்) ஏ. எச். எம். அஸ்வர்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மத்துகம கல்வி வலயத்திற்கு உரித்தான களு/கலேவத்தை தமிழ் வித்தியாலயத்திற்கு உரித்தான காணியின் எல்லைகளை அடையாளமிட்டு வேலியொன்றை நிர்மாணிக்க வேண்டுமென அப்பாடசாலை மாணவர்களின் பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளார்கள் என்பதையும்;

(ii) அகலவத்தை "டொக்கீட்" தோட்டத்தில் வாழும் சிறுவர்களின் நலன் கருதி ஒரு பாடசாலையை நிர்மாணித்துத் தருமாறு அப்பிரதேச மக்கள் கோரியுள்ளார்கள் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி (i) மற்றும் (ii) இன் கீழான கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொடுப்பதற்கும்;

(ii) களு/கலேவத்தை தமிழ் வித்தியாலய மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் உபயோகத்திற்குத் தேவையான மலசலகூட முறைமையொன்றை நிர்மாணித்துக் கொடுப்பதற்கும்;

(iii) அப்பாடசாலைக்கு விளையாட்டு மைதானம் ஒன்றை நிர்மாணித்துக் கொடுப்பதற்கும்

நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1708/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றுள்ளவாறு இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட சகல அரசியல் கட்சிகளின் பெயர்களையும்;

(ii) மேற்படி அரசியல் கட்சிகளின் நிர்வாகக் குழு உறுப்பினர்களது பெயர்களையும்;

(iii) பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளின் கணக்குகள் வருடாந்த அடிப்படையில் கையளிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) பதிவின்பொழுது விதந்துரைக்கப்பட்ட நிபந்தனைகளை நிறைவேற்றாமை காரணமாக பதிவுகள் இரத்து செய்யப்பட்ட அரசியல் கட்சிகளின் பெயர்களையும்;

(ii) கடந்த மூன்று வருடங்களில் இற்றையத் திகதி வரை தேர்தல் ஆணைக்குழு அல்லது தேர்தல் ஆணையாளரின் அலுவலகம் ஆகியவற்றிடமிருந்து ஒவ்வொரு அரசியல் கட்சியும் பெற்றுக்கொண்ட பணம் எவ்வளவு என்பதை வருடாந்த அடிப்படையிலும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1828/ '11

கௌரவ புத்திக பத்திரண,— தபால் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை தபால் திணைக்களத்தில் தற்போது பெருமளவிலான வெற்றிடங்கள் உள்ளன என்பதையும்;

(ii) 2006 ஆம் ஆண்டில் தபால் திணைக்களத்துக்கு தபால் உத்தியோகத்தர்களை சேர்த்துக்கொள்வதற்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதென்பதையும்;

(iii) மேற்படி போட்டிப் பரீட்சை 2007 ஆம் ஆண்டில் நடைபெற்று 2008 ஆம் ஆண்டில் பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளதென்பதையும்;

(iv) அந்த பெறுபேறுகளின் படி இற்றை வரை ஆட்சேர்ப்பு நடைபெறவில்லை என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) 2008 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட பெறுபேறுகளின் படி ஆட்சேர்ப்பு மேற்கொள்ளாமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்குறிப்பிட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், அது எப்போதென்பதையும்

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2118/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2000.12.06 ஆம் திகதிக்கும் 2001.04.19 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் இணைந்த வலையமைப்பை அமைப்பதற்காக David N Town Send & Associates எனும் நிறுவனத்திற்கு ஒப்பந்தமொன்று வழங்கப்பட்டுள்ளதா;

(ii) மேற்படி இணைந்த வலையமைப்பை அமைப்பதற்காக கேள்விப் பத்திரம் கோரப்பட்டதா;

(iii) அவ்வாறாயின் கேள்விப் பத்திரங்களை முன்வைத்த தரப்பினர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் முன்வைக்கப்பட்ட விலைகள் வெவ்வேறாக யாவை;

(iv) ஒப்பந்தம் வழங்கப்பட்ட பணத் தொகை யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி ஒப்பந்தம் வழங்கப்பட்ட நிறுவனத்துக்கு இதன் பொருட்டு முன்வருவதற்கிருந்த தகைமைகள் யாவை;

(ii) மேற்படி ஒப்பந்தத்தை வழங்குவதற்கு பணிப்பாளர் சபையின் அனுமதி வழங்கப்பட்டிருந்ததா;

(iii) மேற்படி நிறுவனம் ஏற்றுக்கொள்ளக்கூடிய இணைந்த திட்டமொன்றை முன்வைத்ததா;

(iv) இன்றேல், இதற்குச் செலவாகிய தொகையை ஒப்பந்தக்காரரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பாரா;

(v) இது தொடர்பாக தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2289/ '12

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2011 உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளை மீள மதிப்பிடுவதற்காக கிடைத்த மொத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) 2011 உயர்தரப் பரீட்சைக்கு (புதிய மற்றும் பழைய பாடத்திட்டத்தின் கீழ்) தோற்றிய மொத்த மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iii) பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும் போது மாவட்டப் பங்கு (quota)மற்றும் இசட் புள்ளிகளைக் காட்டும் போது ஏற்பட்ட தவறுகள் திருத்தப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) மேற்கூறிய பரீட்சையில் சில பாடல்கள் தொடர்பாக பெறுபேறுகளை வெளியிட தாமதமானதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(v) சில பாடங்கள் தொடர்பாக பெறுபேறுகள் வழங்கப்படுவதற்கு முன்னர் Z புள்ளிகள் மற்றும் மாவட்ட பங்கு அளவுகள் எவ்வாறு வெளியிடப்பட்டன என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) உயர்தரப் பெறுபேறுகள் தொடர்பாக ஏற்கனவே மாணவர்கள் மற்றும் மக்கள் நம்பிக்கை இழந்துவிட்டார்கள் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா ?

(இ) இன்றேல் ஏன்?

2308/ '12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2002 தொடக்கம் 2012 ஆம் ஆண்டு வரை பாடசாலை மாணவர்களுக்காக வழங்கப்பட்டுள்ள புகையிரத மற்றும் பஸ் வண்டிகளுக்கான தவணைப் பயணச் சீட்டுக்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) அதற்காக ஒவ்வொரு வருடமும் ஏற்கப்பட்ட செலவினம் எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2378/ '12

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமாவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் அபிவிருத்தியின் பொருட்டும் சர்வதேச ரீதியில் இலங்கையின் நற்பெயருக்குக் கலங்கம் ஏற்படுத்துகின்ற வெளிநாட்டு நிர்ப்பந்தங்களைக் குறைப்பதற்குத் தேவையான சர்வதேச ஒத்துழைப்பினைப் பெற்றுக்கொள்வதற்குச் சாதகமான இராஜதந்திர தொடர்புகளை மேம்படுத்திக்கொள்ளும் நோக்கத்துடனும் 2011 ஆம் ஆண்டில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு விஜயங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி வெளிநாட்டு விஜயங்களில் பங்கேற்றோர் யாவர் என்பதையும்;

(iii) இதன்பொருட்டு செலவாகிய பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி வெளிநாட்டு விஜயங்களின் காரணமாக இலங்கைக்குக் கிடைத்த அனுகூலங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1850/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த 5 வருடங்களின்போது இலங்கை துறைமுக அதிகாரசபையின் 10 பாரிய அளவிலான செலவு அதிகரிப்புகளை துறைமுக மற்றும் வருட வாரியாகவும்;

(ii) மேற்படி (i) இனைத் தீர்மானிப்பதற்கு சகல பகுதிகளையும் ஒன்றுசேர்ப்பதன் கூட்டுவிளைவையும்;

(iii) செலவு அதிகரிப்பு விகிதாசாரத்திற்கேற்ப வருமான அதிகரிப்பு காணப்பட்டதா என்பதையும்;

(iv) இன்றேல், இக்குறைபாடு எவ்வாறு தீர்த்து வைக்கப்பட்டது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) கடந்த 6 வருடங்களில் இலங்கை துறைமுக அதிகாரசபை ஊழியர் ஒருவருக்கான வருமானம், செலவு, இலாபம் மற்றும் சேர்பெறுமதி ஆகியவற்றை வருடவாரியாக அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2012 ஓகத்து 09, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1382/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை கிரிக்கட் குழாமிலுள்ள கிரிக்கட் வீரர்களுக்கு வருடாந்தம் செலுத்தப்படும் தொகையை 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளுக்கு தனித்தனியாக எவ்வளவு என்பதனையும்;

(ii) இக் கொடுப்பனவுகளைத் தீர்மானிக்கும் அளவுகோல் என்ன என்பதனையும்;

(iii) மேற்படி அளவுகோலை நிர்ணயிப்பதற்குப் பொறுப்பானவர் யார் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) கிரிக்கட் விளையாட்டு குழுவினைத் தெரிவு செய்வதற்கு தெரிவுக் குழு முழுப் பொறுப்புடையதா என்பதையும்;

(ii) அவ்வாறு இல்லையாயின் பொறுப்பை வேறு யாரும் கொண்டிருக்கிறார்களா என்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) (i) 2010 இலிருந்து இற்றைவரைக்கும் குழுவைத் தெரிவு செய்பவர்களின் பெயர்களையும்;

(ii) அவர்களுக்கு கொடுப்பனவு செய்யப்படுகின்றதா என்பதையும்;

(iii) ஏதாவது வடிவத்தில் அல்லது வழியில் அவர்களுக்குச் செலுத்தப்படும் தொகையையும்

அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1590/ '11

கௌரவ புத்திக பத்திரண,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மொனராகலை மாவட்டத்தின் புத்தளவில் இடம்பெற்ற தயட்ட கிருல கண்காட்சியோடு இணைந்ததாக நடைமுறைப்படுத்தப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கும்புக்கன, ஒக்கம்பிட்டிய, புத்தள மற்றும் செல்லக்கதிர்காமம் ஆகிய வீதிகள் காபட் இட்டு செப்பனிடப்பட்டது என்பதையும்;

(ii) குறித்த வீதிகளில் சில தற்போது அமிழ்ந்துபோயுள்ளது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி ஒவ்வொரு வீதியையும் அபிவிருத்தி செய்வதற்கு செலவிடப்பட்ட தொகை யாதென்பதையும்;

(ii) அந்த நிதியை வழங்கிய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனம் அல்லது நிறுவனங்கள் யாவையென்பதையும்

வெவ்வேறாக அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) இவ்வீதி அபிவிருத்திப் பணிகள் வழங்கப்பட்ட ஒப்பந்தக்காரர்/ ஒப்பந்தக்காரர்கள் யாவரென்பதையும்;

(ii) குறித்த பணிகளை மேற்பார்வை செய்த நிறுவனம் யாதென்பதையும்;

(iii) மேற்படி வீதியில் சேதமடைந்துள்ள இடங்களை சம்பந்தப்பட்ட ஒப்பந்தகாரர்களைக் கொண்டு மீண்டும் புனரமைக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1903/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— வெகுசன ஊடக, தகவல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கால்டன் விளையாட்டு அலைவரிசையின் (CSN) உரிமை அரசுக்கு அல்லது அரசு சார்பான நிறுவனமொன்றுக்கு உரித்தானதா என்பதையும்;

(ii) இந்நிறுவனம் தனியார் நிறுவனமொன்றுக்குச் சொந்தமானதாக இருப்பின் இந்நிறுவனத்தின் உரிமையாளரது அல்லது உரிமையாளர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்;

(iii) இந் நிறுவனத்தின் பணிப்பாளர் சபையினரின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) கால்டன் விளையாட்டு அலைவரிசையின் ஒலிபரப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி அல்லது ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள திகதி யாதெஎன்பதையும்;

(ii) மேற்படி அலைவரிசையை ஆரம்பிப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ள அலை அதிர்வெண் வீச்சிடை ( frequency range) யாதென்பதையும்;

(iii) கால்டன் விளையாட்டு அலைவரிசைக்கான ஒலிபரப்பு உரிமை வழங்கப்பட்டுள்ள காலகட்டம் யாதென்பதையும்;

(iv) மேற்படி அலைவரிசையை ஆரம்பிப்பதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்ட பிரசுர மற்றும் ஒலிபரப்பு உரிமையை வழங்குவதுடன் தொடர்புடைய உடன்படிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி அலைவரிசையை ஆரம்பிப்பதற்காக செலுத்தப்பட்ட பணத் தொகை யாதென்பதையும்;

(ii) மேற்படி கொடுப்பனவுடன் தொடர்புடைய ஆவணங்களை சமர்ப்பிப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2291/ '12

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உள்ளூராட்சி நிறுவனங்களினால் நிருவகிக்கப்படுகின்ற முன்பள்ளி ஆசிரியர்களின் பதவிகளை மாற்றியமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கான காரணம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) உள்ளூராட்சி நிறுவனங்களின் கீழுள்ள முன்பள்ளிகளின் நிருவாகம் வேறு நிறுவனங்களுக்கு மாற்றப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இவ்வாறு நிருவாகம் மாற்றப்பட்டுள்ள முன்பள்ளிகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி நிறுவனங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் டீஎம்எஸ்/டீ3/97/27/02 கடிதத்தின் மூலம் புதிதாக முன்பள்ளி ஆசிரியர் பதவிகளை அங்கீகரிக்காதிருப்பதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள தீர்மானமானது, உள்ளூராட்சி நிறுவனங்களினால் நிருவகிக்கப்படுகின்ற முன்பள்ளிகள் மூடப்படுவதற்கு காரணமாக அமையும் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2312/ '12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது இலங்கையில் அரச அங்கீகாரத்துடன் இயங்கும் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுடன் இணைந்த பட்டப்படிப்பு மற்றும் பட்டப்பின் படிப்பு பட்டங்கள் வழங்கும் தனியார் உயர்கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்தினதும் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் மற்றும் பதிவு செய்யப்பட்ட ஆண்டு வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) மேற்படி நிறுவனங்களின் தரத்தை மேற்பார்வை செய்யும் அரச நிறுவனம் யாதென்பதையும்;

(iv) இறுதியாக தர மேற்பார்வை மேற்கொள்ளப்பட்ட ஆண்டு மற்றும் தர மேற்பார்வைக்குட்படுத்தப்பட்ட உயர் கல்வி நிறுவனங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அரச அங்கீகாரமின்றி தற்போது இலங்கையில் இயங்கும் பட்டப்படிப்பு மற்றும் பட்டப்பின் படிப்பு பட்டங்கள் வழங்கும் தனியார் உயர் கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி நிறுவனங்கள் பதிவினை பெற்றுக்கொள்ள வேண்டிய நிறுவனம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) 2000 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரை உயர் கல்வியை பெறுவதற்கு வெளிநாடுகளுக்கு சென்றுள்ள மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு புலம்பெயர்ந்துள்ள மாணவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாவையென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2379/ '12

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் எட்டு வருடங்களுக்கு முன்னர் தொடக்கம் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்ட இலத்திரனியல் தேசிய அடையாள அட்டைகள் (eNIC) கருத்திட்டத்தின் தற்போதைய நிலைமை யாதென்பதையும்;

(ii) அதற்காக இதுவரை எத்தனை தடவைகள் கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டன என்பதையும்;

(iii) மேற்படி கேள்விப் பத்திரக் கோரல்கள் நடைமுறைப்படுத்தப்படாமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) தற்போது தகுந்த வழங்குனர் ஒருவர் தெரிவுசெய்யப்பட்டுள்ளாரா என்பதையும்;

(v) மேற்படி வழங்குனர் தெரிவு கேள்விப் பத்திரம் கோரல் மூலம் இடம்பெற்றதா என்பதையும்;

(vi) அவ்வாறெனின், இதற்காக விண்ணப்பித்த ஏனைய கேள்விப் பத்திர விண்ணப்பதாரர்களின் பெயர்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

1829/ '11

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தின் தெனியாய கல்விக் காரியாலயத்திற்குரிய மொரவக்க, கொட்டபொல மற்றும் பஸ்கொட கோட்டக் கல்விக் காரியாலயத்தினால் நிருவகிக்கப்படும் அரச பாடசாலைகளில் கஷ்டப் பிரதேச சேவைக்காலத்தை பூர்த்தி செய்தபின்னர் இடமாற்றம் கிடைக்காததனால் பெரும் விரக்திக்கு உள்ளாகியுள்ள ஆசிரியர்கள் பெருமளவில் இருக்கின்றார்கள் என்பதையும்;

(ii) இதன் காரணமாக இவ்வாசிரியர்களின் கற்பித்தல் தரம் குறைவடையலாம் என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) ஆசிரியர் இடமாற்ற சபைகளின் தீர்மானத்திற்கேற்ப இடமாற்றத்தின் பொருட்டு பூர்த்திசெய்யவேண்டிய ஆகக்குறைந்த தகைமைகள் யாவையென்பதையும்;

(ii) தற்போது மேற்படி கல்வி வலயத்தில் கஷ்டப்பிரதேச சேவைக் காலத்தை பூர்த்தி செய்ததன் பின்னர் இடமாற்றம் கோரியுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இவர்களுக்கு இடமாற்றம் வழங்குவதற்கான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) மேற்படி முறையியல் யாதென்பதையும்;

(v) இதற்கேற்ப இடமாற்றம் வழங்கப்படுமாயின் அத்தேதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1851/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உலகக் கிண்ண கிரிக்கட் போட்டி-2011இற்கு தேவைப்பட்ட மைதானங்களின் எண்ணிக்கையையும்;

(ii) மேற்படி மைதானங்களின் பெயர்களையும்;

(iii) அந்த மைதானங்களைத் தெரிவு செய்வதற்கு பயன்படுத்தப்பட்ட மூலப்பிரமாணங்களையும்; மற்றும்

(iv) இலங்கையில் உலகக் கிண்ண கிரிக்கட் போட்டிற்கு தேவைப்படும் மைதானங்களின் எண்ணிக்கையினை ஐசீசீ (ICC) எப்போது தெரிவித்தது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) சூரியவெவ சர்வதேச கிரிக்கட் மைதான நிர்மாணம் எப்போது ஆரம்பிக்கப்பட்டது என்பதையும்;

(ii) மேற்படி மைதானத்திற்கு கட்டிடக்கலைஞர் திரு. சுரத் விக்கிரமசிங்கவினால் மதிப்பிடப்பட்ட ஆரம்ப நிர்மாணச் செலவினத்தையும் இறுதியாக ஏற்பட்ட உண்மைச் செலவினத்தையும்;

(iii) இறுதிச் செலவினத்தில் ஏற்பட்ட பாரிய அதிகரிப்பிற்கான காரணத்தையும்;

(iv) விக்கிரமசிங்க அல்லது வேறொருவர் இப் பணியை மிகச் சிறந்த முறையில் செய்துமுடித்திருப்பதற்கான வாய்ப்பிருந்தும் ஏன் இந்திய கட்டிடக் கலைஞர் தேவைப்பட்டார் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) கிரிக்கட் மைதானங்கள் நிர்மாணிப்பில் இலங்கை துறைமுக அதிகார சபை (SLPA) ஏன் ஈடுபடுகின்றதென்பதையும்;

(ii) அவ்வாறு செய்வதற்கான ஆணையொன்று இலங்கை துறைமுக அதிகார சபைக்கு வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2119/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— அரச வளங்கள், தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கந்தளாய் சீனிக் கம்பனி மூடப்பட்ட திகதி யாது என்பதையும்;

(ii) அன்று தொட்டு இற்றை வரை அடைந்த நட்டம் யாது என்பதையும்;

(iii) அக்காலப் பகுதிக்குள் அரசாங்கத்தினால் மேற்படி கம்பனிக்கு வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளின் அளவு யாது என்பதையும்;

(iv) மேற்படி கம்பனியின் ஒரு வருடத்திற்கான உற்பத்திக் கொள்ளளவு யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) கந்தளாய் சீனிக் கம்பனி குத்தகைக்கு விடப்படுதலுடன் தொடர்புடைய குத்தகை உடன்படிக்கையை சபாபீடத்தில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(ii) வெளிநாட்டுக் கம்பனியொன்றுக்கு குத்தகைக்கு விடப்பட்டிருப்பின் அதில் இடைத்தரகர்களாக செயலாற்றியவர்களின் பெயர் மற்றும் முகவரி யாது என்பதையும்;

(iii) குத்தகை அடிப்படையில் மேற்படி தொழிற்சாலையை பெற்றுக்கொள்வதற்காக முன்வந்த ஏனைய நிறுவனங்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) கந்தளாய் சீனித் தொழிற்சாலைக்குச் சொந்தமான பொறித் தொகுதிகளின் பெறுமதி யாது என்பதையும்;

(ii) மேற்படி பொறித்தொகுதிகள் குத்தகை உடன்படிக்கையுடன் தொடர்புடையனவா என்பதையும்;

(iii) இன்றேல் மேற்படி பொறித்தொகுதிகள் எதற்காக ஈடுபடுத்தப்பட்டன என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா

(ஈ) இன்றேல், ஏன்?

2380/ '12

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2011ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24ஆம் திகதி ஐக்கிய அரபு எமிரேட்ஸ் இராச்சியத்தின் தூதுக்குழுவுக்கும் இலங்கை அரசுக்குமிடையில் மேற்கொள்ளப்பட்ட வர்த்தக உடன்படிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி உடன்படிக்கைகளுக்கு அமைவாக தற்போது கைத்தொழில்கள் மற்றும் ஏனைய தொழில்முயற்சிகளுக்கென பணத்தை முதலீடு செய்ய முன்வந்துள்ள ஐக்கிய அரபு எமிரேட்ஸ் இராச்சியத்தின் முதலீட்டாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இவர்கள் முதலீடு செய்ய எதிர்பார்த்துள்ள துறைகள் மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட முதலீடுகளின் பெறுமதி வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) மேற்படி முதலீட்டாளர்களுக்காக விசேட சலுகைகள் / நிபந்தனைகள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(v) அவ்வாறாயின், அவை யாவை என்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1830/ '11

கௌரவ புத்திக பத்திரண,— நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தில் வெள்ளப்பெருக்கைத் தடுப்பதற்காக நில்வலா திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள அனைத்து கட்டுமானங்களும் அழிவடையும் ஆபத்துக்கு உள்ளாகியுள்ளன என்பதையும்;

(ii) இதன் விளைவாக அழகிய சின்னாக் காடுகளும் அழிவடையும் அச்சுறுத்தலை எதிர்நோக்கியுள்ளதென்பதையும்;

(iii) வெள்ளப்பெருக்கு அபாயம் ஏற்படலாம் என்பதால் விவசாயிகள் பெரும் நெருக்கடி நிலைக்கு உள்ளாகியுள்ளனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) நில்வலா திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டுள்ள கால்வாய்களையும் கட்டுமானங்களையும் துரிதமாக புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1852/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) பி.சரவணமுத்து விளையாட்டுமைதானம் அபிவிருத்தி செய்யப்பட்டதிலிருந்து எத்தனை வருடங்களின் பின்னர் அங்கு சர்வதேச கிரிக்கெட் போட்டி நடைபெறும் என அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) பி.சரவணமுத்து விளையாட்டுமைதானத்தை அபிவிருத்தி செய்வதற்கு தமிழ் யூனியன் கிரிக்கெட் கழகம் முன்வைப்பு ஒன்றை வழங்கியிருந்தமையையும்;

(ii) 25000 ஆசனங்களையுடைய மைதானத்தை அபிவிருத்தி செய்வதற்கான மேற்படி முன்வைப்பு ரூபா.780 மில்லியன் என்பதையும்;

(iii) செலவு செய்வதற்கு இயலாத ஒத்த நோக்கத்திற்கு மாற்று முன்வைப்புகளள ஏற்றுக்கொள்ளும் அதேவேளையில் சொல்லப்பட்ட முன்வைப்பிற்கு இலங்கை கிரிக்கெட் மறுப்புத்தெரிவித்திருந்தமையையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) பி.சரவணமுத்து மைதானத்தை அபிவிருத்தி செய்வதற்கு தமிழ் யூனியன் கிரிக்கெட் கழகத்தினால் வழங்கப்பட்டிருந்த முன்வைப்பிற்கு மறுப்புத் தெரிவித்திருந்தமைக்கான காரணங்களையும்;

(ii) ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏனைய முன்வைப்புகளையும்;

(iii) மாற்று முன்வைப்புகளள ஏற்றுக்கொள்வதற்கான காரணங்களையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2120/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— அரச வளங்கள், தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2001 தொடக்கம் 2004 ஆம் ஆண்டுவரை எம்பிலிப்பிட்டிய கடதாசித் தொழிற்சாலை பெற்ற இலாபம் அல்லது நட்டம் யாவையென்பதையும்;

(ii) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் மேற்படி தொழிற்சாலையின் ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதற்கு அரசினால் ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகள் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி தொழிற்சாலை செமா (திறமுறை தொழில்முயற்சி முகாமைத்துவ முகவராண்மை) நிறுவனத்துக்கு கையளிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) செமா நிறுவனத்துக்கு கையளிக்கப்பட்ட பின்பு இத்தொழிற்சாலைக்கு அரசாங்கத்தினால் அல்லது வேறு வழிகளினால் செலவு செய்யப்பட்ட தொகை யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி தொழிற்சாலை முப்பது வருட குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்ட நிறுவனம் யாதென்பதையும்;

(ii) மேற்படி குத்தகைக் காலத்தின் ஆரம்ப மற்றும் இறுதி வருடம் யாதென்பதையும்?

(iii) மேற்படி குத்தகை கால கட்டத்திற்காக அரசாங்கத்திற்குக் கிடைத்த குத்தகைத் தொகை யாதென்பதையும்;

(iv) குத்தகை உடன்படிக்கையை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்

அவர் சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) (i) மேற்படி தொழிற்சாலைக்குச் சொந்தமான காணியின் பரப்பளவு ஏக்கர்களில் எவ்வளவு என்பதையும்;

(ii) குத்தகைக்கு வழங்கப்பட்ட காலப்பகுதியில் இக் காணி ஏக்கர் ஒன்றின் அரச மதிப்பீட்டுப் பெறுமதி யாதென்பதையும்;

(iii) இங்குள்ள இயந்திரங்களின் பெறுமதி எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி இயந்திரங்கள் குத்தகை உடன்படிக்கைக்கு ஏற்புடையவையா என்பதையும்;

(v) இன்றேல் இவ்வியந்திரங்கள் எதற்காக உபயோகிக்கப்பட்டது என்பதையும்

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

# 2012 ஓகத்து 10 வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1384/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில்,

(i) வெளிநாட்டலுவல்கள் அமைச்சினால் வாடகைக்கு அல்லது குத்தகைக்கு பெறப்பட்ட கட்டிடங்களுக்கான மொத்த செலவு எவ்வளவு என்பதையும்;

(ii) வாடகைக்கு அல்லது குத்தகைக்கு எடுக்கப்பட்ட ஒரு சதுர அடி கட்டிடத்திற்கான கூலி எவ்வளவு என்பதையும்;

(iii) அக்கட்டிடங்களுக்கான குத்தகைக் காலப்பகுதி எவ்வளவு என்பதையும்

அவர் தனித்தனியாக தெரிவிப்பாரா?

(ஆ) மேற்படி வருடங்களில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினால்,

(i) அமைச்சின் ஏதேனும் நிறுவனங்களுடன் தொடர்புபடாத வாகனங்களை வாடகைக்கு அல்லது குத்தகைக்கு எடுப்பதற்கான செலவிடப்பட்ட மொத்தத் தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) சொந்தமாக இருந்த வாகனங்களின் மொத்த எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) வெளி மூலங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ஏனைய சேவைகள் எவை என்பதையும்;

(iv) வெளி மூலங்களிலிருந்து பெறப்பட்ட குறிப்பிட்ட சேவைகளுக்கான செலவு எவ்வளவு என்பதையும்;

(v) வெளி மூல அடிப்படையில் எத்தனை பேரிடம் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது என்பதையும்;

(vi) மொத்த பணியாட்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் தனித்தனியாக தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1636/ '11

கௌரவ புத்திக பத்திரண,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) சுனாமியால் அழிவடைந்த காலி மகமோதரை மருத்துவமனையை மீளக் கட்டியெழுப்புவதற்காக ரூபா 3000 மில்லியன் வெளிநாட்டு உதவித் தொகையொன்று கிடைத்து ஐந்து ஆண்டுகளுக்கும் மேல் கடந்துள்ளதென்பதையும்;

(ii) இதுவரை அதன் நிர்மாணப் பணிகள் அத்திவாரத்துக்கு மாத்திரம் மட்டுப்பட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) இந்த மருத்துவமனையை நிர்மாணிப்பதற்காக ஒப்பந்தகாரருக்கு அரசினால் வரிச் சலுகை வழங்கப்பட்டுள்ளதா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மருத்துவமனையை நிர்மாணிப்பதற்காக ரூபா 3000 மில்லியன் தொகையை வழங்கிய நாடு யாதென்பதையும்;

(ii) ஒப்பந்தகாரர் மேற்படி தொகையைப் பெற்றுக்கொண்டு மருத்துவமனைக் கட்டடத்தை நிர்மாணிக்காமை தொடர்பாக ஆராயும் பொருட்டு சுகாதார அமைச்சினால் ஏதேனும் விசாரணை மேற்கொள்ளப்பட்டதா என்பதையும்;

(iii) ஆமெனில், அதன் பெறுபேறு யாதென்பதையும்;

(iv) விசாரணை மேற்கொள்ளப்படவில்லையெனின், அதற்கான காரணம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஈ) (i) மீண்டும் வெளிநாட்டுக் கடனைப் பெற்று இதன் நிர்மாணப் பணிகளை மேற்கொள்வதற்கான ஏதேனும் திட்டம் உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அக் கடன்தொகை எவ்வளவென்பதையும்;

(iii) அக்கடன் தொகையைப் பெற்றுக்கொள்ளும் நிறுவனம் மற்றும் நாடு யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

1986/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தற்போது அரசாங்கத்திற்குச் சொந்தமாகவுள்ள தனியார் கம்பனிகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இக்கம்பனிகளின் பெயர்களும் அவை உரியதாயுள்ள அமைச்சுக்களும் தனித்தனியாக யாவையென்பதையும்;

(iii) ஒவ்வொரு கம்பனியினதும் பணிப்பாளர் சபை அங்கத்தவர்களின் பெயர்களும் முகவரிகளும் யாவையென்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு கம்பனியிலும் இலங்கை அரசாங்கத்திற்குச் சொந்தமாக வுள்ள பங்குகளின் சதவீதம் மற்றும் தனியார் துறையினால் முதலீடு செய்யப்பட்டுள்ள பங்குகளின் சதவீதம் தனித்தனியாக எவ்வளவு என்பதையும்;

(v) தனியார் முதலீட்டாளர்களின் பெயர்களும் முகவரிகளும் ஒவ்வொரு கம்பனி வாரியாக யாவையென்பதையும்;

(vi) மேற்படி ஒவ்வொரு கம்பனியும் 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் பெற்றுள்ள தேறிய இலாபம் அல்லது நட்டம் தனித்தனியாக எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2382/ '12

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இந்நாட்டில் காணப்படுகின்ற, வெளிநாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கொன்சுலர் அலுவலகங்களுக்கு ஆட்களை பெயர் நியமனம் செய்கின்றபோது வெளிநாட்டலுவல்கள் அமைச்சு பின்பற்றும் நடைமுறை யாதென்பதையும்;

(ii) மேற்படி நியமனமொன்றை ஏற்புடைய நாடு பிரேரிக்கும் போது உள்நாட்டு அதிகாரிகள் அதனை அங்கீகரிப்பதற்காக எடுக்கும் காலம் எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி உத்தேச ஆட்களுக்கு இருக்க வேண்டிய தகைமைகள் யாவையென்பதையும்;

(iv) குறிப்பிட்டதொரு நாடு தமது பிரதிநிதியை பெயர் நியமனம் செய்ததன் பின்னர் அதனை அங்கீகரிப்பதில் ஏதேனும் சிக்கல் காணப்படும் பட்சத்தில் அது தொடர்பாக ஏற்புடைய நாட்டின் அரசுக்கு அல்லது ஏற்புடைய நபருக்கு அறிவிக்கப்படுகின்றதா என்பதையும்

வர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1831/ '11

கௌரவ புத்திக பத்திரண,— நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அநுராதபுர மாவட்டத்தில் அமைந்துள்ள யோத கால்வாயை புனரமைப்பதற்காக இற்றைக்கு ஒரு வருடத்திற்கு முன்னர் அடிக்கல் நாட்டப்பட்டதென்பதையும்;

(ii) இற்றைவரை இப்புனரமைப்புப் பணிகள் அங்குரார்ப்பண விழாவிற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) யோத கால்வாயின் புனரமைப்புப் பணிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(ii) புனரமைப்புப் பணிகள் இற்றைவரை ஆரம்பிக்கப்படாமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படுமாயின் அத் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1932/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை பொலிஸ் சேவையிலுள்ள பட்டதாரிகளது எண்ணிக்கையையும்;

(ii) மேற்படி எண்ணிக்கையானது மொத்த பொலிஸ் படையில் எத்தனை வீதம் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) பட்டதாரி பொலிஸ் ஆளணியினருக்கு பதவி உயர்வுகளை வழங்குவதற்காக பொலிஸ் திணைக்களத்தினால் விசேட நடைமுறைகள் ஏதாவது பின்பற்றப்படுகின்றனவா என்பதையும்;

(ii) பட்டதாரி பொலிஸ் ஆளணியினரை, உதவி பொலிஸ் பரிசோதகர்களாக பதவி உயர்த்துகின்றபோது பொலிஸ் திணைக்களத்தினால் விசேட தெரிவு நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றனவா என்பதையும்

(iii) பட்டதாரி பொலிஸ் ஆளணியினரை அங்கீகரிப்பதற்கு விசேட ஏற்பாடுகளை பொலிஸ் திணைக்களம் மேற்கொண்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2121/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2005ஆம் ஆண்டு தொடக்கம் 2011ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு குத்தகை அடிப்படையில் வாகனங்கள் பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், பெறப்பட்டுள்ள வாகனங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி வாகனங்கள் எப்பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என்பதையும்;

(iv) மேற்படி வாகனங்களை வழங்கிய குத்தகை நிறுவனங்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினர்களின் பெயர்கள், முகவரிகள் யாவை என்பதையும்;

(v) மேற்படி வாகனங்களைப் பெற்றுக்கொண்ட ஆண்டுகள் யாவை என்பதையும்;

(vi) தற்போது இந்த வாகனங்கள் விடுவிக்கப்பட்டிருப்பின், விடுவிக்கப்பட்ட ஆண்டுகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2383/ '12

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அனுப்பல் கட்டளை விடுக்கப்பட்டிருந்த மருந்துப் பொருட்கள் கிடைக்கும் வரை மருந்துப்பொருட்கள் வழங்கலில் காணப்படுகின்ற பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய உள்நாட்டுச் சந்தையில் கொள்வனவு செய்யப்பட்ட மருந்துப் பொருட்களுக்களின் கொடுப்பனவுக்காக ரூபா 500 மில்லியன் குறைநிரப்பு மதிப்பீடொன்று 2011ஆம் ஆண்டில் அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததை அவர் அறிவாரா?

(ஆ) (i) சுகாதார அமைச்சிடம் 2011ஆம் ஆண்டின் மருந்துப் பொருட்கள் தேவைப்பாடு தொடர்பிலான ஒரு மதிப்பீடு காணப்படவில்லையா;

(ii) அனுப்பல் கட்டளை தாமதமானதால் மேற்குறிப்பிடப்பட்ட வருடத்தில் உள்நாட்டுச் சந்தையிலிருந்து கொள்வனவு செய்ய வேண்டி நேரிட்ட மருந்துப் பொருட்கள் யாவை;

(iii) மேற்குறிப்பிடப்பட்ட மருந்துப் பொருட்களின் அனுப்பல் கட்டளைகள் தாமதமடைந்தமைக்கான காரணங்கள் யாவை;

(iv) உள்நாட்டுச் சந்தையில் மேற்குறிப்பிடப்பட்ட மருந்துப் பொருட்களைக் கொள்வனவு செய்கையில் பின்பற்றப்பட்ட நடைமுறைகள் யாவை;

(v) உள்நாட்டுச் சந்தையில் கொள்வனவு செய்யப்பட்ட மருந்துப் பொருட்களின் வகை, அளவு மற்றும் கொள்வனவு செய்த நிறுவனம் என்பவற்றை வெவ்வேறாகவும்

இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1832/ '11

கௌரவ புத்திக பத்திரண,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அநுராதபுர பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலக வளவினுள் பல கோடி ரூபா பெறுமதியுடைய பல வாகனங்கள் பல வருடங்களாக சிதைவடைந்து வருகின்றன என்பதையும்;

(ii) அரச வளங்களை இவ்வாறு நாசமடைய இடமளித்தல் பாரியதொரு தவறாகும் என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மேற்படி வாகனங்களை பழுதுபார்த்து மீள பயன்படுத்தாமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) இவ்வாகனங்களை பழுதுபார்த்து மீள பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதையும்;

(iii) ஆமெனில், இதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1933/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) தரம் குறைந்த பெற்றோலின் இறக்குமதி மற்றும் விநியோகம் காரணமாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்ட நட்டம் எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இம் மோசடியில் மேல் இருந்து கீழ்வரை உடந்தைகள் காணப்பட்டன என்பதையும்;

(ii) மிகவும் விழிப்பாக இருந்த தொழிற்சங்க உறுப்பினர்களினால் மட்டுமே இம்மோசடி வெளிக்கொணரப்பட்டது என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) தரம் குறைந்த பெற்றோலை இறக்குமதி செய்தமை தொடர்பாக 2011 ஓகத்து 29 இல் கையளிக்கப்பட்ட அறிக்கையை அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஈ) (i) இம் மோசடி வியாபாரத்தில் ஈடுபட்ட அதிகாரிகளின் பெயர்களையும்;

(ii) அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளையும்;

(iii) ஹெஜிங் மோசடியில் ஈடுபட்டிருந்த உயர் அதிகாரிகள் சுதந்திரமாக இயங்குவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்த அதேவேளை இம் மோசடியில் ஈடுபட்ட அதிகாரிகளை மாத்திரம் ஆவலுடன் தண்டிப்பதற்கான காரணத்தையும்

அவர் கூறுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

2122/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பணியாட்டொகுதிக்குரிய சாரதிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) 2005ஆம் ஆண்டு தொடக்கம் 2011ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட சாரதிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இவர்களில் பிற அரச நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ள சாரதிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) அவ்வாறு விடுவிக்கப்பட்ட சாரதிகளின் பெயர்கள் மற்றும் அவர்கள் விடுவிக்கப்பட்டுள்ள அரச நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(v) மேற்படி சாரதிகளுக்குச் செலுத்தப்படும் சம்பளங்கள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களிலிருந்து மீளளிப்புச் செய்யப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

பா.9/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பாராளுமன்றத்தில் தேசிய கீதம் இசைத்தல்,— நாட்டில் தேசிய மனப்பாங்கை ஏற்படுத்துமுகமாக பாராளுமன்ற அமர்வு ஆரம்பமாக முன்னரும் ஒத்திவைக்க முன்னரும் பாராளுமன்றத்தில் தேசிய கீதம் இசைக்க வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.10/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பலமான இலங்கை அடையாளத்தை ஏற்படுத்துதல்,— அரச ஆவணங்களில் ஒருவரது சாதியையும் சமயத்தையும் வெளிப்படுத்த வேண்டுமென்ற தேவைப்பாடு பலமான தேசிய அடையாளத்தை ஏற்படுத்துவதற்கு தடையாகவும் இடர்ப்பாடகவுமுள்ளதால் இத்தேவைப்பாட்டிலிருந்து விலக்களிக்கப்பட வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.11/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— வர்த்தக நோக்கங்களுக்காக சமயத் தலைவர்களின் உருவங்களை பயன்படுத்துவதை தடைசெய்தல்,— சகல சமயங்களும் சமமாக மதிக்கப்படல் வேண்டுமென்பதுடன் புத்தபெருமான், யேசுநாதர், சிவபெருமான், முஹம்மட் நபி (ஸல்) அவர்கள் ஆகியோரின் உருவங்களை வர்த்தக விளம்பரங்களிலோ வேறுவிதமான சமயசார்பற்ற படிவங்களிலோ பயன்படுத்தலை தடைசெய்தலும் வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.12/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— நீதிமன்றங்களை அவமதித்தல் நடைமுறைகளை ஒழுங்குபடுத்துவதற்கான புதிய சட்டங்களை ஆக்குதல்,— சகலருக்கும் சமமான நியாயத்தை உறுதிப்படுத்துவதற்காக சனநாயகத்தை வலுப்படுத்துவதற்கு பலமான சுதந்திர ஊடகவியலை ஏற்படுத்துவதற்கும் நீதிமன்றங்களை அவமதித்தல் நடைமுறைகளை ஒழுங்குபடுத்துவதற்கான புதிய சட்டங்களை ஆக்க வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.13/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொதுமக்களின் நலனுக்கான சட்டநடவடிக்கைகளுக்காக சட்டங்களை அறிமுகப்படுத்தல்,— வறிய மக்களின் அடிப்படை உரிமைகள் மீறுதல், அரசாங்க கொள்கைகளில் உள்ளடக்கம் மற்றும் நடாத்துதல், மாநகர சபைகள் அதிகாரிகளினால் பொதுக் கடமைகள் நிறைவேற்றுதல், சமய உரிமைகள் அல்லது அடிப்படை உரிமைகள் மீறுதல் மற்றும் பொதுமக்களை கடனாளிகளாக்குகின்ற அல்லது அவர்களுக்கு மேலதிக பொறுப்புகள் ஏற்படுத்துகின்ற ஊழல்கள் ஆகியவை தொடர்பில் பொதுமக்களின் நலனுக்கான சட்டநடவடிக்கைகளுக்காக சட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.14/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரசியல் கட்சிகளினால் தேர்தல் ஆணைக்குழுவுக்கு நிதி கணக்காய்வு அறிக்கைகள் சமர்ப்பித்தல்,— எல்லா அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளினாலும் பெறப்பட்ட வருமானமும் செலவிடப்பட்ட செலவினமும் பற்றிய கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டுமெனவும் வருடம் தோறும் தேர்தல் ஆணைக் குழுவுக்கு சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.15/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரச அலுவலர்களுக்கு தண்டனை வழங்குதல்,— அரச உயர் அலுவலர்கள் தமது சுதந்திர நிலைமையை அரசியல் மயமாக்கி மற்றும் அவர்கள் முறைகேடாக நடந்தால் அதனால் அவர்கள் குற்றவாளிகளாக கண்டுபிடிக்கப்பட்டால் அவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுப் பத்திரங்களை கையளித்து தண்டனை விதிக்கப்பட வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.16/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஓய்வு பெறும் வயதெல்லையை நீடித்தல்,— அரச அலுவலர்களின் ஓய்வு பெறும் வயதெல்லை 65 வருடம்வரை நீடிக்கப்பட வேண்டுமென்றும் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டால் விசேட திறமையுள்ள அரச அலுவலர்களின் ஓய்வு பெறும் வயதெல்லை 70 வருடம்வரை நீடிக்கப்பட வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.17/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— கல்வியைப் பாதுகாப்பதற்காக தரப் பாதுகாப்பு பேரவையொன்றை நிறுவுதல்,— பொறுப்பற்ற முறையில் பல்கலைக்கழக பெயர்களை பாவித்து இலங்கையினுள் பல கல்வி நிறுவனங்கள் உருவாக்கப்படுவதனால் கல்வியை எதிர்கால சந்ததியினருக்காக பாதுகாப்பதற்காக "தரப் பாதுகாப்பு பேரவையொன்றை" சட்டத்தின் மூலம் உடனடியாக நிறுவ வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.18/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— 'விசேட வழக்குத் தொடுநர்' எனப்படும் பதவியொன்றை உருவாக்குதல்,— அரச சேவை அரசியல் தலையீடுகளிலிருந்து விலக்குவதற்காக சுதந்திர ஆணைக்குழுக்கள், அரசாங்க கணக்குக் குழு, அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழு ஆகியவற்றினால் நிறுவனங்களில் செயற்றிறமை பாதிக்கின்ற மோசடிகள், ஊழல்கள், செயற்திறமையில்லாமை ஆகியவற்றை கண்டுபிடித்த உடனே பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்காக அவற்றுக்கெதிராக வழக்குத் தொடுக்கப்படுவதற்கு "விசேட வழக்குத் தொடுநர்" எனப்படும் பதவியொன்று உருவாக்கப்பட வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.20/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பணவீக்கத்திற்குப் பொருத்தமான வகையில் 1% கொடுப்பனவு ஒன்று ஊழியர்களுக்கு செலுத்துதல்,— அரச நிறுவனங்களினால் நிர்வகிக்கப்படும் ஊழியர் சேமலாப நிதிய மற்றும் ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதிய பணங்களை செலுத்துவதில் ஒவ்வொரு வருடத்திற்கான பணவீக்க அளவுக்கு மேலதிகமாக 1% கொடுப்பனவு ஒன்று ஊழியர்களுக்கு செலுத்துவதை உறுதிப்படுத்த வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.21/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— சிரேஷ்ட பிரசைகளுக்கு இலவச பயண வசதிகள் ஏற்பாடு செய்தல்,— சகல சிரேஷ்ட பிரசைகளுக்கும் பொதுப்போக்குவரத்துச் சேவைகளில் இலவச பயண வசதிகளை ஏற்பாடு செய்துதர வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.22/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— தகராறுகள் தீர்க்கும் நிலையமொன்றை உருவாக்குதல்,— பல இன, மத மக்கள் வாழும் இலங்கையில் சமாதானத்திற்கு பங்கம் ஏற்படும் சவால்களை எதிர்நோக்குகின்றமையினால் அவைகளை இலங்கையிலும், பிராந்தியத்திலும் மற்றும் முழு உலகத்திலும் தீர்ப்பதற்காக பௌத்த, கிரிஸ்தவ, இந்து மற்றும் இஸ்லாம் ஆகிய மதங்களின் ஒழுக்க நெறிகளைக் கொண்ட, தகராறுகள் தீர்க்கும் நிலையமொன்றை உருவாக்க வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.23/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஓய்வு ஆகிய பணிக்கொடையை தாமதமின்றி பெற்றுக்கொடுத்தல்,— இதுவரை ஓய்வூதியப் பணிக்கொடையைப் பெற்றிராத ஓய்வு பெற்றவர்களுக்கு அப்பணிக்கொடையை தாமதமின்றி பெற்றுக்கொடுப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.24/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— தேசிய கொள்கையாக்க சபை ஒன்றினை நியமித்தல்,— முறைசார் தேசிய கொள்கை மற்றும் திட்டவாக்கம் தொடர்பில் அரசியல்வாதிகள், மற்றும் விடயம்சார் அதிகாரிகளைக் கொண்டதும் அரசாங்கம் மாறும்போது மாறாததுமான விசேட அதிகாரங்களைக் கொண்ட தேசிய கொள்கையாக்க சபையொன்று நியமிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.25/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க, — வெளிநாட்டில் வேலை செய்பவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல் தொடர்பில் சட்ட அதிகாரங்களைக் கொண்டதோர் அலகை ஏற்படுத்தல்,— வெளிநாடுகளில் வேலைசெய்வோர்கள் முகம் கொடுக்க வேண்டி ஏற்படுகின்ற தாக்குதல்கள், ஆட்கடத்தல், கற்பழிப்பு, பெண்களை இழிதொழிலில் ஈடுபடுத்தல், ஆட்கொலைகள் மற்றும் வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்பு தொடர்பில் செல்லும்போது இடம்பெறுகின்ற மோசடிகள், வெளிநாடுகளில் அகதிகளாக்கப்பட்டுள் ளவர்களை திரும்ப அழைத்துக்கொள்ளல் மற்றும் அவர்களின் பாதுகாப்பு தொடர்பில் செயற்படக்கூடிய சட்ட அதிகாரங்களைக் கொண்டதோர் அலகு ஏற்படுத்தப்பட வேண்டு மென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.26/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— புதிய கண்டுபிடிப்பாளர்களை உலகிற்கு அறிமுகப்படுத்து முகமாக தேசிய திட்டமொன்றினை உருவாக்குதல்,— புதிய கண்டுபிடிப்பாளர்களையும் பலதரப்பட்ட திறமைகளைக்கொண்ட பிரசைகளையும் உலகத்திற்கு அறிமுகப்படுத்து வதற்காகவும் அவர்களது திறமைகள் உருவாக்கங்களை மேம்படுத்துவதற்காகவும் தேசிய திட்டமொன்றினை வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.27/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— உள்ளூர் மூலவளங்களை பயன்படுத்தும் கைத்தொழிலாளர்களுக்கு வரிச்சலுகைகள் வழங்கல்,— உலகச் சந்தைக்காக 75% உள் நாட்டு மூலவளங்களைப் பயன்படுத்தி உற்பத்திகளை மேற்கொள்ளும் உள்நாட்டு கைத்தொழிலாளர்களுக்கு 2 வருடகால வரிச்சலுகை வழங்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.28/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— தோட்ட சமுதாயத்திற்கு பிரசாவுரிமை வழங்குதல்,— இலங்கைப் பிரசாவுரிமையற்ற சகல தோட்டப்புற மக்களிற்கும் அவர்களது விருப்பத்தின் பேரில் பிரசாவுரிமை வழங்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.29/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— தீவிலேயுள்ள ஆரம்பப் பாடசாலை மாணவர்களிற்கு ஒரு கோப்பைப் பால் வழங்குதல்.— தீவிலேயுள்ள சகல ஆரம்பப் பாடசாலை மாணவர்களிற்கும் காலையில் இலவசமாக ஒரு கோப்பை பால் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.30/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியங்களை ஒரு வாரகாலத்தினுள் விண்ணப்பதாரிகளுக்கு பெற்றுக் கொடுத்தல்,— ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியங்களை மீளப்பெற விண்ணப்பிப்பவர்களுக்கு ஒரு வார காலத்தினுள் அவற்றைப் பெற்றுக் கொடுப்பதற்கு உரிய திட்டமொன்றினை வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது

பா.31/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பாடசாலை மாணவர்களுக்கு இலவசப் பயணச் சீட்டு வழங்குதல்,— பாடசாலை மாணவர்கள் வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை பேரூந்துகளில் பிரயாணம் செய்வதற்காக இலவச பயணச்சீட்டுக்களை வழங்குகின்ற முறையொன்றினை அறிமுகப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.32/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— விளையாட்டுப் பாடசாலைகளை அமைத்தலும் தேசிய விளையாட்டுக் கொள்கையினை வகுத்தலும்,— நீண்ட கால இலக்குடைய தேசிய விளையாட்டுக் கொள்கையினை வகுப்பதற்கான நடிவடிக்கைகளை எடுப்பதற்கான முதல் கட்டமாக சகல மாவட்டங்களையும் உள்ளடக்கூடிய வகையில் விளையாட்டரங்கு, விளையாட்டு மைதானம், விளையாட்டு உபகரணங்கள், விளையாட்டு போதனாசிரியர் களைக் கொண்ட உயர் மட்ட விளையாட்டுப் பாடசாலைகளை அமைக்க வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.33/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— தேசிய மொழிகளிற்கான கல்விப் பீடமொன்றினை நிர்மாணித்தல்,— ஆசிரியர்களிற்கு சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளை கற்பிப்பதற்காக தேசிய மொழிகளிற்கான கல்விப்பீடமொன்றினை நிர்மாணிக்க வேண்டு மென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.44/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரசாங்க தகவல்களை சுதந்திரமாக பெற்றுக் கொள்வதற்காக சட்டங்களை இயற்றுதல்,— அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மையை பேணுவதற்கும் பொதுமக்கள் அனைத்து அரசாங்க தகவல்களையும் சுதந்திரமாக பெற்றுக் கொள்வதற்கான உரிமைக்காகவும் பாராளுமன்றத்தில் சட்டங்கள் இயற்றப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.45/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— இலங்கையர்களுக்கு மிகவும் சிறந்த சுகாதார வாய்ப்புக்களை வழங்குதல்,— மக்களில் அதிகமானோர் இருதய சத்திரசிகிச்சை செய்ய வேண்டிய தேவை உடையவர்களாய் இருப்பதால் இலங்கையர்களுக்கு மிகவும் சிறந்த சுகாதார வாய்ப்புக்களை வழங்க வேண்டியிருப்பதாலும் அதற்காக தனியார் துறை ஊழியர்களுக்கு ஊழியர் சேமலாப நிதியம் அல்லது ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தினூடாக இலவசமாக வசதிகளை செய்துகொடுக்க வேண்டும் என்றும் அரசாங்க ஊழியர்கள் அல்லது தொழிலற்றோருக்கு அதற்கான முழு செலவையும் அரசாங்கத்தினால் சனாதிபதி நிதியத்தினூடாக வழங்குதல் வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.46/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— உலக சுற்றாடலை பாதுகாத்தல்,— இலங்கை உலக சுற்றாடலை பாதுகாக்கும் பொருட்டு கூடிய கவனம் செலுத்த வேண்டுமென்பதோடு புவி வெப்பமாதலை தவிர்ப்பதற்காக குறிப்பாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.47/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பாராளுமன்ற நடவடிக்கைகளை ஒளிபரப்புதல்,— தொலைக்காட்சி அல்லது இணையம் மூலமாக பாராளுமன்ற நடவடிக்கைகள் நேரடியாக அல்லது தணிக்கை செய்யப்பட்டு ஒளிபரப்பப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.48/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாடுகளில் வசிக்கின்ற இலங்கையர்களுக்கு வாக்களிப்பதற்கான அனுமதியை வழங்குதல்,— வெளிநாடுகளில் வசிக்கின்ற இலங்கையர் களுக்கு எதிர்கால தேர்தல்களில் வாக்களிப்பதற்கு அனுமதி வழங்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.49/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— இலத்திரனியல் வாக்களிப்பு முறைமையினை அறிமுகப்படுத்துதல்,— தற்போதுள்ள பழைமையான வாக்களிப்பு முறைமைக்குப் பதிலாக இலத்திரனியல் வாக்களிப்பு முறைமையொன்று அறிமுகப்படுத்தப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.51/ '10

கௌரவ அஜித் குமார,— காலி கோட்டை மற்றும் அதனை அண்டியுள்ள வரலாற்று ரீதியான மற்றும் தொல்பொருள் மரபுரிமைகளைப் பாதுகாத்தல், மேம்படுத்தல் மற்றும் உரிய பயனைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்தல்,— சுற்றுலா கைத்தொழில் துறையின் மிக முக்கியமான மையமாகவும், வரலாற்று மற்றும் தொல்பொருள் ரீதியில் பெறுமதியைக்கொண்டதும், உலக மரபுரிமையாகக் கருதப்படுகின்றதுமான காலி கோட்டை மதில், காலி கோட்டையின் உள்பகுதியிலும் காலி கோட்டையை அண்டியும் அமைந்துள்ள வரலாற்று மற்றும் தொல்பொருள் ரீதியான மரபுரிமைகளைப் பாதுகாப்பதற்கும், மேம்படுத்துவதற்கும் அவற்றுடன் தொடர்புடைய அரச நிறுவனங்களினதும் மக்களினதும் பங்கேற்புடன் முறையான திட்டமொன்றை நடைமுறைப்படுத்தி இந்த வரலாற்று ரீதியான மரபுரிமைகளின் உரிய பயனை நமது நாடு பெற்றுக்கொள்ளும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.57/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— தேருநர் இடாப்பை அடிக்கடி இற்றைப்படுத்துதல்,— தேருநர் இடாப்பு வருடத்தில் மாதமொன்றுக்கு முப்பது நாட்களுக்கு மட்டும் இற்றைப்படுத்தும் பட்டியலொன்றாக அல்லாமல் அது அடிக்கடி இற்றைப்படுத்தும் திறந்த பட்டியலொன்றாக இருத்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.59/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களில் ஈடுபட்டுள்ளோருக்கு ஓய்வூதிய முறையொன்றை அறிமுகப்படுத்துதல்,— வெளிநாடுகளுக்குச் சென்று மிகவும் சிரமத்திற்கு மத்தியில் உழைக்கும் செல்வத்தை, இலங்கையின் செல்வத்தை அதிகரிப்பதற்காக அனுப்புகின்ற, வெளிநாட்டு வேலைவாய்ப்புகளில் ஈடுபட்டுள்ளவர்களை மதிக்கும் வகையில் ஓய்வூதிய முறையொன்றை பெற்றுக்கொடுத்தல் வேண்டுமேன இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.60/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— 2009 மே மாதம் 19 ஆம் திகதிக்கு முன்னர் சேவையில் இருந்த ஆயுதப் படையினருக்காக ஓய்வூதிய முறையொன்றை அறிமுகப்படுத்தல், — பாராளுமன்ற உறுப்பினர்கள் 5 வருட சேவைக்காலத்தை பூர்த்திசெய்த பின்னர் ஓய்வூதியத்தைப் பெறுவதற்கு தகைமைபெறுகின்றதனால் ஆயுதப் படைகளில் 22 வருடங்கள் பூர்த்தி செய்யாத போதிலும் 2009 மே மாதம் 19 ஆம் திகதிக்குப் முன்னர் சேவையில் இருந்த ஆயுதப் படையினருக்கும் ஓய்வூதியம் பெற்றுக்கொடுக்கப்படல் வேண்டும் என இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.62/ ’10

கௌரவ ரவி கருணாநாயக்க,— வலது குறைந்ததும் நடமாடமுடியாததுமான நபர்களுக்கு விசேட வடிவங்களை அறிமுகப்படுத்துதல்,— சட்டத்தில் குறிப்பிடப்படுகின்றவாறு வலது குறைந்தோரின் வசதிகளை உறுதிப்படுத்தவும் அவர்களிடமுள்ள வினைத்திறனை அதிகரிப்பதற்காகவும் அவர்கள் தேவையற்ற விதத்தில் பிறர்மீது தங்கிருப்பதைக் குறைப்பதற்காகவும் அரசாங்கத்தின் அனைத்து புதிய கட்டிடங்கங்களிலும் விசேட வடிவமொன்றை அமைக்க வேண்டும் என இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.63/ ’10

கௌரவ ரவி கருணாநாயக்க,— வாக்களிக்கும் உரிமையை உறுதிப்படுத்தல்,– பதிவுசெய்திருந்தும் வாக்களிப்பதற்கான வாய்ப்புக்கிடைக்காத வாக்காளர் அநேக எண்ணிக்கையானோர் இருப்பதனாலும் 18 வயதுக்கு மேற்பட்ட அனைத்து நபர்களுக்கும் வாக்களிக்கும் உரிமையை பெற்றுக்கொடுக்க வேண்டுமெனவும் தேருநர் இடாப்பில் பெயர் குறிப்பிடப்பட்டதன் பின்னர் வாக்களிக்காத நபர்களிடமிருந்து தண்டப் பணமொன்றை அறவிவிடுதல் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.64/ ’10

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஊழலற்ற உலகொன்றை உறுதிப்படுத்தல்,— ஊழலை முற்றாக ஒழிப்பதற்காக இலங்கை பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றிணைந்து உலகிலுள்ள பாராளுமன்ற அமைப்புக்களில் சேர வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 69/ ‘10

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஏமாற்றப்பட்ட பண வைப்பாளர்களுக்கு தமது நிதிகளை மீளச் செலுத்துதல்,— போலி நிதி நிறுவனங்களில் தமது பணத்தை வைப்பிலிட்டு அதனால் ஏமாற்றமடைந்த அநேகமானோர் இருப்பதனாலும் கடந்த 2009/2010 தேர்தல் பிரசாரங்களில் இந்த அரசாங்கம் பண வைப்பாளர்கள் மற்றும் நிதி நிறுவனங்களுக்கு அவற்றின் மிகுதிப் பணத்தை மீளச் செலுத்த வாக்குறுதி அளித்திருப்பதனாலும் மத்திய வங்கி இந்நிறுவனங்களின் பொறுப்பாளராக இருப்பதனால் மிகவும் வினைத்திறனுடன் செயற்படவேண்டுமென்பதோடு பண வைப்பாளர்களுக்கு அவர்களது மிகுதிப் பணத்தை பெற்றுக் கொடுக்க அரசாங்கம் முன்வர வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 72/ ‘10

கௌரவ புத்திக பதிரண,— சமாதான நீதவான் பதவிகளை வழங்குவதற்கான முறையான வழிமுறையொன்றைத் தயாரித்தல்,— சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றதும் சமுகத்திற்கு அளப்பரிய சேவையாற்றுவதுமான சமாதான நீதவான் பதவிகள், ஏற்றுக்கொள்ளப்பட்ட நியதிகளுக்குப் புறம்பாக வழங்கப்படுவதன் காரணமாக அப்பதவியின் கௌரவமும் அங்கீகாரமும் படிப்படியாக குறைவடைவதனால் குறித்த நியமனங்களுக்கென முறையான வழிமுறையொன்றைத் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுன்றம் கருதுகின்றது.

பா. 74/ ‘10

கௌரவ புத்திக பதிரண,— சுனாமி அனர்த்தத்தினால் ஏற்பட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு காணல்,— சுனாமி அனர்த்தம் காரணமாக ஏதேனும் பிரச்சினைக்கு முகம் கொடுத்து இது வரை அப்பிரச்சினைக்கு தீர்வு கிடைக்காமல் இருப்பின், பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் மாவட்ட செயலாளர் பிரிவு அடிப்படையில் ஆராய்ந்து, அவர்கள் முகம்கொடுத்துள்ள அல்லது தற்போது முகம்கொடுக்கும் பிரச்சினைகளை குறைப்பதற்கான வினைத்திறன்மிக்க வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 75/ ‘10

கௌரவ புத்திக பதிரண,— வீட்டிலிருந்து தொழில் புரிவோருக்கான தேசிய கொள்கையொன்றை வகுத்தல்,— இலங்கையில் பலதரப்பட்ட தொழில் வாய்ப்புத் துறைகளில் பல தரப்பட்ட உற்பத்திப் பணிகளில் ஈடுபடும் சுமார் பத்து இலட்சம் பேர்களான வீட்டிலிருந்து தொழில் புரிவோர்களுக்காக அரசியல் அதிகாரம் வாய்ந்தோர்கள், அதனுடன் தொடர்புபட்ட சகல துறைகளினதும் தேர்ச்சிபெற்றவர்கள் புத்தி ஜீவிகள் உட்பட அரச, மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியைப் பெற்று முறையான தேசிய கொள்கையொன்றை வகுத்து அதனை துரிதமாக நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 76/ ‘10

கௌரவ புத்திக பதிரண,— நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ளமுடியாதுள்ள வயற்காணிகளை பயனுள்ள நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துதல்,— வயற் காணிகளை நிரப்புவதற்கான சட்டம் மீறப்படாத வகையில், ஒழுங்குமுறையான ஆய்வு ஒன்றின் மூலம் இனங்காணப்பட்டதன் பின்னர் எவ்வகையிலும் நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ள முடியாத வயற் காணிகளில் பயனுள்ள விவசாய உற்பத்திகளை மட்டும் பயிரிடுவதற்கும், நிர்மாணப் பணிகளுக்காக எவ்வித வாய்ப்புகளும் கிடைக்காத வகையிலுமான நிகழ்ச்சித் திட்டங்களை வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 77/ ‘10

கௌரவ புத்திக பதிரண,— அரச சேவையைச் சேர்ந்த ஓய்வூதியம் பெறுபவர்களின் சம்பள முரண்பாட்டினை நீக்குதல்,— 2006/6 சம்பள மீள்திருத்த சுற்றறிக்கையின் பிரகாரம் 2006.06.01 ஆம் திகதியிலிருந்து அமுலாகின்றவாறு அரச ஊழியர்களுக்கு சம்பள மாற்றம் வழங்கப்பட்டமையால் 2006.06.01 ஆம் திகதிக்கு முன்னர் ஓய்வுபெற்ற மற்றும் அதன் பின்னர் ஓய்வுபெற்ற அரச ஊழியர்களுக்கிடையில் பாரிய சம்பள முரண்பாடு நிலவுவதால் அதனை நீக்குவதற்கான ஒரு தேசிய வேலைத்திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 78/ ‘10

கௌரவ புத்திக பதிரண,— மாவட்ட மட்டத்தில் தகவல் மத்திய நிலையங்களை நிறுவுதல்,— புவியியல் அமைவு, வரலாற்றுப் பின்னணி, பயிரிடப்படும் பயிரினங்கள், வீதி முறைமை அரச அலுவலகங்கள், பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், புகையிரத நிலையங்கள் மற்றும் பேரூந்து தரிப்பிடங்கள் ஆகிய அனைத்து தகவல்களும் கணனிமயப்படுத்தப்பட்ட மற்றும் ஆவணப்படுத்தப்பட்ட தகவல் மத்திய நிலையங்களை நிறுவுவதற்கும், அதன் முதலாவது கட்டத்தின் போது மகாகாண மட்டத்திலும் இரண்டாவது கட்டத்தின் போது மாவட்ட மட்டத்திலும் மூன்றாவது கட்டத்தின் போது பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேச மட்டத்திலும் இந்நிலையங்களை நிறுவவேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 79/ ‘10

கௌரவ புத்திக பதிரண,— இலங்கையில் அறநெறி பாடசாலைகளின் கல்வி மற்றும் நிர்வாகத்தை ஒழுங்கு முறைப்படுத்தல்,— இலங்கையில் சகல மதங்களினதும் அறநெறி பாடசாலைகளின் கல்வி மற்றும் நிர்வாகத்தை மேலும் ஒழுங்கு முறைப்படுத்துவதற்கும் பௌத்த அறநெறி பாசாலைகளில் காணப்படும் அறநெறி இறுதிப் பரீட்சை மற்றும் அறநெறி தர்மாசார்ய பரீட்சை மற்றும் சகல மதங்களினதும் அறநெறி பாடசாலைகளில் நடாத்தப்படும் இவற்றுக்கு இணையான பரீட்சைகளின் சான்றிதழ்களுக்கு உரிய அங்கீகாரத்தை வழங்குதலும், அறநெறிப் பாடசாலைக்கு தொடர்ச்சியான மனித வளங்களுடன் பௌதீக வளங்களையும் வழங்குவதன் மூலம் அறநெறிப் பாடசாலைகளுக்கு சமுகமளிக்கும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு துரித வேலைத்திட்டமொன்றை வகுத்தலும் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 80/ '10

கௌரவ புத்திக பதிரண,— நாய்கள், பூனைகள் போன்ற செல்லப் பிராணிகளை வளர்த்தல் தொடர்பான சட்டங்களை வகுத்தல்,— வீடுகளில் அல்லது விற்பனை செய்வதற்காக வளர்க்கப்படும் நாய்கள், பூனைகள் போன்ற செல்லப்பிராணிகளை உள்ளூராட்சி நிறுவனங்களில் பதிவு செய்யத் தேவையான சட்டங்கள் வகுக்கப்பட வேண்டுமென்பதோடு, குறித்த பிராணிகளின் குட்டிகளை, சட்டரீதியான அனுமதி பெற்ற நிலையங்களில் மாத்திரம் விற்பனை செய்தல் வேண்டுமெனவும் அவ்வாறல்லாத இடங்களில் வளர்க்கப்படும் பெண்ணினப் பிராணிகளை கட்டாயமாக மலடாக்கலுக்கு உட்படுத்துவதற்கும், தேவையான சட்டங்கள் வகுக்கப்படவேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 81/ '10

கௌரவ புத்திக பதிரண,— தொழில் சந்தைக்குத் தேவையான ஊழியர்களை பயிற்றுவித்தல்,— எதிர்காலத்தில் இலங்கையில் உருவாகும் புதிய தொழில் வாய்ப்புகளுக்குத் தேவையான ஊழியர்களைப் பயிற்றுவிக்கும் வழியொன்றைத் தொடங்கி வைக்கும் பணியை மிகவும் வினைத்திறனான வகையில், நாட்டினுள் காணப்படும் அனைத்து மூன்றாம் நிலைக்கல்வி நிறுவனங்களினூடாக ஆரம்பித்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 82/ '10

கௌரவ புத்திக பதிரண,— பொதுநிர்வாக கட்டமைப்பை மறுசீரமைத்தல்,— தற்சமயம் பொதுநிர்வாக அமைச்சினால் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எல்லைகளை மீள நிர்ணயிப்பதற்கனான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதோடு அவ்வாறு எல்லை நிர்ணயம் செய்யப்படும் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளினூடாக புதிய பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேச எல்லைகளையும் புதிய மாவட்ட எல்லைகளையும் நிர்ணயிக்க வேண்டுமெனவும், இவ்வாறு நிர்ணயிக்கப்படும் பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசங்கள் உள்ளூராட்சி மன்ற ஆளுகைப் பிரதேசங்களாக மாற்றியமைக்க வேண்டுமெனவும், அத்தகைய ஆளுகைப் பிரதேசத்தினுள் கோட்டக் கல்வி அதிகாரப் பிரதேசம், பொலிஸ் அதிகாரப் பிரதேசம், கமநல சேவைகள் அதிகாரப் பிரதேசம், பிரதேச சுகாதார சேவை உத்தியோகத்தர் அதிகாரப் பிரசேதம் உள்ளிட்ட சகல அரச நிறுவனங்களினதும் அதிகாரப் பிரதேச எல்லைகள் உள்ளடங்கும் வகையில் ஒட்டுமொத்தமான பொதுத்துறைக் கட்டமைப்பும் திருத்தப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 83/ '10

கௌரவ புத்திக பதிரண,— நில்வளா கங்கை திட்டத்தின் எதிர்கால அபிவிருத்திப் பணிகளை மீள ஆரம்பித்தல்,— மாத்தறை மாவட்டத்தின் நில்வளா கங்கை திட்டத்தின் அபிவிருத்திப் பணிகள் இடைநடுவில் முடங்கியிருப்பதால் அப்பள்ளத்தாக்கின் ஊட்டப் பிரதேசத்தில் பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ளும் மக்கள் முகங்கொடுத்துள்ள பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும், நில்வளா கங்கை திட்டத்தின் எதிர்கால அபிவிருத்திப் பணிகளை விரைவில் மீள ஆரம்பிக்க வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 84/ '10

கௌரவ புத்திக பதிரண,— மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் மக்களின் பிரதிநிதிகளின் பதவிக் காலத்துக்குப் பின்னரும், சமாதான நீதவான் பதவியினை வழங்குதல்,— மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் மக்கள் பிரதிநிதிகளுக்கு வழங்கப்படுகின்ற, சமாதான நீதவான் பதவியானது, அவர்களது பதவிக் காலத்துக்கு மட்டும் வரையறுக்கப்பட்டுள்ளதாலும், இப்பதவிக்காலத்தின் பின்னரும், அவர்களிடம் மேற்படி சேவையினைப் பெறுவதற்காக வரும் அநேகமானோர் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர் என்பதாலும், இம் மக்கள் பிரதிநிதிகளுக்கு தமது பதவிக் காலத்தின் பின்னரும், சமாதான நீதவான் பதவியினை வழங்குவதற்கான தகுந்ததொரு வேலைத் திட்டத்தினை வகுத்தல் வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 85/ '10

கௌரவ புத்திக பதிரண,— மாகாண சபை அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்கள் அனைவரினதும் கொடுப்பனவுகள் மற்றும் சிறப்புரிமைகள் குறித்து மீளாய்வு செய்தல்,— நாட்டில் தற்போது இயங்கி வருகின்ற மாகாண சபைகள் மற்றும் எதிர்காலத்தில் ஒழுங்கு முறையாக செயற்படவுள்ள வடமாகாண சபையின், கௌரவ அமைச்சர்கள், தவிசாளர்கள், உபதவிசாளர்கள், ஆளும் கட்சியின் முதற்கோலாசான், சபைத் தலைவர்கள், எதிர்க் கட்சித் தலைவர்கள், எதிர்க் கட்சியின் முதற்கோலாசான் மற்றும் கௌரவ உறுப்பினர்கள் ஆகியோரின் கொடுப்பனவுகள், சிறப்புரிமைகள் மற்றும் வசதிகள் ஒழுங்கான முறையில் காணப்படாமையினால், இது தொடர்பாக ஆழமாக ஆராய்ந்து அதற்கான ஒழங்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 86/ '10

கௌரவ புத்திக பதிரண,— உள்ளூராட்சி நிறுவனங்களின் அனைத்து மக்கள் பிரதிநிதிகளினதும் கொடுப்பனவுகள் மற்றும் சிறப்புரிமைகளை மீளாய்வு செய்தல்,— நாட்டில் நடைமுறையிலுள்ள மற்றும் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள அனைத்து மாநகர சபை, நகர சபை, மற்றும் பிரதேச சபைகளினதும் நகரபிதாக்கள், நகர சபைத் தலைவர்கள், மற்றும் பிரதேச சபைத் தலைவர்கள், பிரதி நகரபிதாக்கள், பிரதி நகர சபைத் தலைவர்கள், உப தலைவர்கள், எதிர்க்கட்சித் தலைவர்கள் மற்றும் கௌரவ உறுப்பினர்கள் ஆகியோரின் கொடுப்பனவுகள், சிறப்புரிமைகள் மற்றும் வசதிகள் ஒழுங்குமுறையாக இல்லாத காரணத்தால் இது தொட்பாக ஆழமாக ஆராய்ந்து இதற்கான ஒழுங்குமுறையுடன் கூடிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 87/ '10

கௌரவ புத்திக பதிரண,— வடக்கு கிழக்கில் காணாமற் போன தமிழ் மக்களுக்கு மரணச் சான்றிதழ் வழங்குதல்,— வடக்கு கிழக்கு பிரதேசங்களில் யுத்தம் நடைபெற்ற கடந்த மூன்று தசாப்த காலமாக பல்வேறு காரணங்களால் காணாமற் போயுள்ளவர்கள் தற்போது உயிர் வாழ்கின்றார்களா, இல்லையா என்பதையிட்டு துரிதமாக விசாரணை செய்து, இவர்கள் உயிருடன் இல்லாதிருப்பின் இவர்களுக்கான மரணச் சான்றிதழ்களை வழங்குதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 88/ '10

கௌரவ புத்திக பதிரண,— தேசிய இளைஞர் கொள்கையொன்றை வகுத்தல்,— அனைத்து அரசியல் கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட தெரிகுழுவொன்றை நியமித்து, இலங்கைக்கு உகந்த தேசிய இளைஞர் கொள்கையொன்றை வகுத்தல் ஆரம்பிக்கப்பட்ட வேண்டுமெனவும் அந்நோக்கத்திற்காக அதனுடன் தொடர்புடைய அனைத்துத் துறைகளும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தேர்ச்சி பெற்றவர்கள் அறிஞர்கள் மற்றும் புத்திஜீவிகளினதும் அதேபோன்று அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களினதும் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 89/ '10

கௌரவ புத்திக பதிரண,— அரசாங்க பாடசாலைகளையும், பல்கலைக் கழகங்களையும் விடுமுறை நாட்களில் கற்கை அலகுகளுக்காகப் பெற்றுக்கொடுத்தல்,— அரசாங்க பாடசாலைகளின் விடுமுறை நாட்களிலும் பிற்பகல் நேரத்திலும், பல்கலைக்கழகங்களின் விடுமுறை நாட்களிலும், அந்த நிலையங்களை அடிப்படையாகக் கொண்டு, வர்த்தக சமுதாயத்தினரையும், அரச சார்பற்ற அமைப்புகளையும், வர்த்தகச் சபைகளையும், சமுதாய அடிப்படையிலான அமைப்புகளையும் இணைத்துக்கொள்கின்றதான விரிவானதொரு வேலைத்திட்டமாக, முதியோர் மற்றும் முறைசாரா கற்கை அலகுகள் சலுகைக் கட்டண அடிப்படையில் ஆரம்பிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 90/ '10

கௌரவ புத்திக பதிரண,— வெற்றிடமாகின்ற கிராம உத்தியோகத்தர் பதவிகளில் பதிற் கடமை புரியும் நியமனங்களுக்காக வினைத்திறன்மிக்க வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல்,— கிராம உத்தியோகத்தர் பதவியில் வெற்றிடம் ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் அண்மையிலுள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவைச் சேர்ந்த கிராம உத்தியோகத்தர் மிகச் சிறியதொரு கொடுப்பனவின் அடிப்படையில் பதிற்கடமைக்காக நியமிக்கப்படுவதாலும், மேற்படி பதிற் கடமை நியமனத்தின் மூலம் கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் இரண்டினதும் வினைத்திறன் வீழ்ச்சயடைவதாலும், இந்த நிலைமையை தவிர்த்துக் கொள்ளும் பொருட்டு சகல பிரதேச செயலகப் பிரிவுகளிலும் கிராம உத்தியோகத்தர் சேர்மம் ஒன்றை அமைக்க வேண்டுமென்பதோடு, வெற்றிடம் ஏற்படுகின்ற பிரிவுகளுக்கு மேற்படி சேர்மத்திலிருந்து கிராம உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கும், மேற்படி சேர்மத்திலுள்ள கிராம உத்தியோகத்தர்களை, பிரதேச செயலாளரினால் ஒப்படைக்கப்படுகின்ற வேறு பயனுள்ள துறைகளில் அல்லது கடமைகளில் ஈடுபடுத்துவதற்குமான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 91/ '10

கௌரவ புத்திக பதிரண,— தற்போது செயற்படும் சிவில் பாதுகாப்புக் குழுக்குகளுக்கு உத்தியோகபூர்வ அங்கீகாரத்தை வழங்குதல்,— சகல கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் அமைந்துள்ள மத வழிபாட்டுத் தலங்களின் தலைமை தேரர், மதகுரு, பாடசாலை அதிபர், கிராம உத்தியோகத்தர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், கமத்தொழில் ஆராய்ச்சி உதவியாளர், சனசபைச் செயலாளர்கள், பிரதேசத்தின் பொலிஸ் நிலையத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் ஒரு உத்தியோகத்தர், மற்றும் உரிய கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள தொண்டர் அமைப்புக்கள், அரச மற்றும் தனியார் துறைகளில் பணிபுரியும் உரிய பிரிவில் வசிக்கும் பிரதிநிதிகளை உள்ளடக்கிய சிவில் பாதுகாப்புக் குழுக்கள் அமைக்கப்படுவதை மிகவும் எளிதாக்கும் பொருட்டு தற்போதைய சிவில் பாதுகாப்புக் குழுக்களுக்கு உத்தியோகபூர்வ அங்கீகாரமொன்றை வழங்கக்கூடியவாறான பாராளுமன்றச் சட்டமொன்று நிறைவேற்றப்படுதல் வேண்டுமெனவும் அதனூடாக கிராம உத்தியோகத்தர் பிரிவில் நடைபெறுகின்ற குற்றச் செயல்கள், துர்நடத்தைகள் மற்றும் சட்ட விரோத நடவடிக்கைகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட பிரிவுகளுடன் சிறந்த தொடர்பைக் கட்டியெழுப்புவதற்கு இயலுமானவாறு குறித்த சட்டங்கள் ஆக்கப்படுதல் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 92/ '10

கௌரவ புத்திக பதிரண,— நாட்டில் தற்பொது அமுலில் உள்ள காலங்கடந்த சட்டங்களை இற்றைப்படுத்துதல்,— தற்போதும் இலங்கையில் ஏகாதிபத்திய வழிகளின் காலத்தில் அறிமுகஞ் செய்யப்பட்ட சட்டங்கள் அமுலாகிவருவதால் காலங்கடந்த தண்டனைகள், தண்டப்பணம் என்பவற்றை இற்றைப்படுத்துவதற்கான தேசிய வேலைத் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுத்தப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 93/ ‘10

கௌரவ புத்திக பதிரண,— தேர்தல்ள் அனைத்தையும் ஒரே நாளில் நடத்துதல்,— இலங்கையில் 1988 இல் இருந்து 2010 வரையான 22 வருட காலப்பகுதிக்குள் 1990, 1992, 1995, 1996, 1998, 2003, மற்றும் 2007 ஆம் ஆண்டுகளைத் தவிர்ந்த ஏனைய ஒவ்வோர் ஆண்டிலும் ஏதேனும் ஒரு தேர்தல் நடத்தப்பட்டுள்ளதோடு அவ்விதமாக தேர்தல்களை நடத்துதலானது மக்களின் அபிப்பிராயத்தைக் கண்டறிவதற்கான பெறுமதி மிக்க அளவுகோலாக அமைந்த போதிலும், இதன் மூலமாக நாட்டின் பொருளாதாரம், நிருவாகம் போன்ற அனைத்துத் துறைகளிலும் தீவிரமான தாக்கம் ஏற்படுத்தப்படுவதால் உள்ளூராட்சித் தேர்தல்கள், பொதுத்தேர்தல்கள் மற்றும் சனாதிபதித் தேர்தலை ஒரே நாளில் நடத்துவதற்கேதுவாக மேற்படி நிறுவனங்களின் பதவிக் காலத்தை திருத்தியமைக்கவும் பொருத்தமான தேர்தல் வழிமுறையொன்றை உருவாக்கவும் தகுந்தவாறு அரசியலமைப்புத் திருத்தமொன்றை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 94/ ‘10

கௌரவ புத்திக பதிரன,— பாராளுமன்ற சனநாயகத்தை வலுப்படுத்துவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளுதல்,— நாட்டினுள் சனநாயகத்தை மேலும் வலுவூட்டும் நோக்கத்துடன் பாராளுமன்றத்திற்கும் மாகாண சபைகளுக்கிடையிலும், மாகாண சபைகளுக்கும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கிடையிலும் சிறந்த இணைப்பினை பேணிவருதல் அத்தியாவசியமாயுள்ளதோடு, இதற்கு உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள் மாகாண சபைகளில் பிரதிநிதித்துவம் வகிப்பதை உறுதிசெய்வதற்கும் மாகாண சபை தலைவர்கள் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வகிப்பதை உறுதி செய்வதற்குமான செயல்முறையொன்றை தயாரிப்பதற்குத் தேவையான அரசியலமைப்புத் திருத்தமொன்று மேற்கொள்ளப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 95/ ‘10

கௌரவ புத்திக பதிரன,— தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்,— தேசிய ஒருமைப்பாட்டை மேம்படுத்தும் நோக்கில் தமிழ் மொழி பேசுகின்ற மக்கள் வாழ்ந்து வரும் பிரதேசங்களில் சிங்கள மொழிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும் சிங்கள மொழி பேசுகின்ற மக்கள் வாழும் பிரதேசங்களில் தமிழ் மொழிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும், அரச, அரச சார்பற்ற மற்றும் தனியார் நிறுவனங்களின் உதவியுடன் நடைமுறைப்படுத்தல் வேண்டுமென்பதுடன், அரச மற்றும் தனியார் இலத்திரனியல் ஊடகங்கள் மட்டுமன்றி அச்சு ஊடக நிறுவனங்களின் ஒத்துழைப்பினையும் பெற்றுக்கொண்டு இப்பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பிப்பதற்கான ஒரு தேசிய நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 96/ ‘10

கௌரவ புத்திக பதிரண,— வாழ்க்கைத் துணையின் தகாத செயல்களினால் நிர்க்கதிக்குள்ளாகும் தரப்பினருக்கு நிவாரணமளித்தல்,— திருமணமான கணவன் மனைவி தம்பதிகள் ஒரே வீட்டில் வாழ்கின்ற சந்தர்ப்பங்களில் கணவன் அல்லது மனைவி மதுபாவனை சூதாட்டம் அல்லது வேறு துர்நடத்தைகளில் ஈடுபட்டு, காணி, வீடு அல்லது வீட்டுப் பாவனைப் பொருட்களை தனது தற்றுணிபின் பிரகாரம் விற்பதன் காரணமாக அல்லது வேறு நபர்களுக்கு ஒப்படைப்பதன் காரணமாக மற்றைய தரப்பினருடன் பிள்ளைகளும் கடும் நிர்க்கதி நிலைக்குள்ளாகின்ற சந்தர்ப்பங்களில் அந்நிலைமையை தடுப்பதற்குத் தேவையான சட்டங்கள் ஆக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 98/ '10

கௌரவ புத்திக பதிரண,— ஒழுக்க நெறிகள் பற்றிய குழுவை தாபித்தல்— இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர்களின் நம்பகத்தன்மையையும் அவர்களிடத்தில் உயரிய ஒழுக்க நெறிகளையும் பேணவேண்டிய தேவைப்பாட்டைப் பற்றி ஆராய்வதற்காக ஒழுக்க நெறிகள் பற்றிய குழு ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 99/ '10

கௌரவ புத்திக பதிரண,— புதிய இலத்திரனியல் அடையாள அட்டையை வழங்குதல்,— நிர்வாகத்தை எளிதாக்குதல், குற்றங்களை கட்டுப்படுத்துதல் மற்றும் ஏனைய மோசடியான நடவடிக்கைகளில் ஈடுபடுவதைக் குறைப்பதற்காக, குறித்த நபரின் இரத்தப் பிரிவு, வங்கிகக் கணக்குகள், கடன் அட்டை, கல்வித் தகைமை, சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் வெளிநாட்டுப் பிரயாண கடவுச்சீட்டு இலக்கம் ஆகிய முக்கியமானதும் தேவையானதுமான தகவல்களை உள்ளடக்கிய புதிய இலத்திரனியல் இலக்கத்துடனான, தேசிய அடையாள அட்டையொன்று வழங்கப்படுதல் வேண்டும் எனவும், பிரதேச செயலகப் பிரிவுகளில் வசிக்கும் அனைவரது தகவல்களையும், கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் மட்டத்தில் கணனிமயப்படுத்தலை துரிதப்படுத்தல் வேண்டும் எனவும் இத் தகவல்கள் அவ்வப்போது இற்றைப்படுத்தப்படல் வேண்டும் எனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 100/ '10

கௌரவ புத்திக பதிரண,— ஆண் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் இருபது வருட சேவைக் காலத்தின் பின்னர், ஓய்வு பெறுவதற்கு வாய்ப்பளித்தல்,— பொலிஸ் திணைக்களத்தில் பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான இருபது வருட சேவைக் காலத்தின் பின்னர், சுயவிருப்பில் ஓய்வு பெறுவதற்கான இயலுமானது, ஆண் பொலிஸ் உத்தியோகத்தர்கள் தொடர்பிலும் ஏற்புடையதாதல் வேண்டுமென்றும் அதற்கான செயல்முறை ஒன்று உருவாக்கப்படல் வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 101/ '10

கௌரவ புத்திக பதிரண,— ஒழுங்குவிதிகளை நீக்குவதற்கான குழுவை தாபித்தல்,— ஒழுங்குவிதிகள் உருவாக்கப்படுவதும் நீக்கப்படுவதும் அன்றாடம் இடம்பெறும் நடைமுறையாதலால், காலம் கடந்த ஒழுங்குவிதிகளை நீக்குவது பற்றி ஆராய்வதன் பொருட்டு ஒழுங்கு விதிகளை நீக்குவதற்கான குழு ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 102/ '10

கௌரவ புத்திக பதிரண,— சிவில் பாதுகாப்புப் படையைச் சார்ந்த உத்தியோகத்தர்களை, சேவையில் நிரந்தரமாக்கல்,— சிவில் பாதுகாப்புப் படையைச் சார்ந்த உத்தியோகத்தர்களுக்கும் அரசாங்கத்தின் ஏனைய பாதுகாப்புப் பிரிவுகளில் மற்றும் திணைக்களங்களில் சேவையில் ஈடுபடும் உத்தியோகத்தர்களுக்கு உள்ளதைப் போன்று சம்பளம், கொடுப்பனவு, நிரந்தர சேவை மற்றும் ஓய்வூதியத்துடனான உத்தியோக அந்தஸ்து வழங்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 103/ '10

கௌரவ புத்திக பதிரண,— உறுதியளித்தல் பற்றிய குழுவை தாபித்தல்,— பாராளுமன்றத்தில் கேட்கப்படும் வினாக்களுக்கு விடைகளாக அரசாங்கம் வழங்கும் உறுதி மொழிகளும் அரசாங்கத்தின் கடப்பாடுகளும் மீறப்படுகின்ற பல சந்தர்ப்பங்களைக் காணக்கூடியதாயுள்ளதால் அரசாங்கம் தனது பொறுப்புக்களை நிறைவேற்றுவதையும் அவை தொடர்பில் பொறுப்புக் கூறுவதையும் உறுதி செய்யும் பொருட்டு உறுதியளித்தல் பற்றிய குழுக்களை தாபிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 104/ '10

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— பனை மர விளைச்சலுக்கு ஊக்கமளித்தல்,— "கற்பகதரு" எனஅழைக்கப்படும் பொதுமக்களுக்கு மிக்க பயனைப் பெற்றுத்தரும் பனை மர விளைச்சலுக்கு ஊக்கமளித்து பனைப் பொருள் அபிவிருத்திக்காய் அனைத்து நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென இச்சபை தீர்மானிக்கின்றது.

பா. 105/ '10

கௌரவ புத்திக பதிரண,- புகையிரத திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகளின் உற்பத்தித் திறனை அதிகரிக்கச் செய்தல்,- இலங்கை புகையிரத திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகளில் உள்ள அனுமதியற்ற கட்டுமானங்களையும் அனுமதியற்ற குடியிருப்பாளர்களையும் துரிதமாக அப்புறப்படுத்தி சட்டரீதியான கட்டுமானங்கள் தொடர்பான உடன்படிக்கைகளை மீளாய்வுக்குட்படுத்துவதன் மூலம் திணைக்களத்திற்கு கிடைக்கும் வருமானங்களை அதிகரிக்கச் செய்ய வேண்டுமென்பதுடன், திணைக்களத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு நேரடி தாக்கத்தை ஏற்படுத்தாத காணிகளை நீண்ட கால குத்தகை அடிப்படையில் தனியார் துறைக்கு வழங்கி, அந்நிதியை புகையிரத வலைப்பின்னலின் நவீனமயமாக்கலுக்கு பயன்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.108/ '10

கௌரவ புத்திக பதிரண,— பிச்சைக்காரர்களின் வாழ்வைப் பாதுகாப்பதற்கான முறையியலொன்றைத் தயாரித்தல்,— தற்போது பிச்சைக்காரர்களின் வாழ்வுக்கு பாரியளவில் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதால் அவர்களது வாழ்வைப் பேணிக்காக்கும் பொருட்டு, அவர்களுக்கு பயிரிடுவதற்கான காணிகளை வழங்கி அதிலிருந்து கிடைக்கின்ற வருமானத்தில் அவர்களது வாழ்வின் பாதுகாப்பினையும் போசனையையும் உறுதிப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.109/ '10

கௌரவ புத்திக பதிரண,— கட்டாக்காலியாக திரிகின்ற நாய்களின் மூலம் மனித உயிர்களுக்கு ஏற்படுகின்ற சேதத்தை தடுப்பதற்காக முறையியலொன்றைத் தயாரித்தல்,— கட்டாக்காலியாக திரிகின்ற நாய்களின் மூலம் மனித உயிர்களுக்கு ஏற்படுகின்ற சேதத்தை தடுக்கும் நோக்கத்தோடு, அரசாங்கம் நிலப் பரப்பொன்றை ஒதுக்கி கட்டாக்காலியாக திரிகின்ற நாய்களை அவ்விடத்திற்குக் கொண்டுசென்று அவற்றைப் பராமரிப்பதற்குப் பொருத்தமான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.110/ '10

கௌரவ புத்திக பதிரண,— சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் தொடர்பில் கடுமையான தண்டனைகளை விதித்தல்,— நாடு முழுவதிலும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் நாளுக்கு நாள் சடுதியாக அதிகரித்துவரும் நிலைமை ஏற்பட்டுள்ளதால், அது தொடர்பாக தற்போதுள்ள சட்ட விதிகள் போதியதாக இல்லாதிருப்பின், புதிய சட்ட விதிகளை புதிதாக நிறைவேற்றி மிகவும் துரிதமாக இது தொடர்பான வழக்குகளை தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.111/ '10

கௌரவ புத்திக பதிரன,— சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்காக கரையோர நுழைவுப் பாதைகளை அமைத்தல்,— நாட்டின் கரையோர வலயத்தில் துரிதமாக இடம்பெறுகின்ற நிர்மாணங்கள் காரணமாக உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் மற்றும் கடற்றொழிலாளர்கள் கடற்கரைக்கு பிரவேசிப்பதில் அசௌகரியம் ஏற்படுதலானது, சுற்றுலாத்துறை மேம்பாட்டிற்கும் கடற்றொழிலை மேற்கொள்வதற்கும் தடைகளை ஏற்படுத்துவதனால், இந்நிலமையை தடுப்பதற்கும் இத்துறைகளை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டும் கடற்கரை நுழைவுப் பாதை முறைமையொன்று அமைக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.112/ '10

கௌரவ புத்திக பதிரன,— கல்வி நிருவாக சேவை உத்தியோகத்தர்களின் சம்பள முரண்பாடுகளை நீக்குதல்,— அதிபர் சேவை, ஆசிரியர் சேவை, கல்வி நிருவாக சேவை ஆகிய சேவைகளில் பாரிய சம்பள முரண்பாடுகள் நிலவுவதால் இந்நிலைமையை போக்கி இவர்களின் சுய கௌரவத்திற்கு உகந்ததொரு சம்பளத்தைக் கிடைக்கச் செய்யும் வகையில், சம்பள முரண்பாடுகளை நீக்குவதற்குரிய முறையியலொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.113/ '10

கௌரவ புத்திக பதிரண,— பௌத்த பிக்குக் கல்வியை மேம்படுத்துதல்,— பௌத்த பிக்குமார்களின் மத அறிவை மேம்படுத்தும் நோக்கத்தோடு அவர்களின் பேச்சாற்றல், செவிமடுக்கும் ஆற்றல், கணனி, உளவியல் மற்றும் ஆலோசனை பற்றிய அறிவு என்பவற்றை மேம்படுத்துவதற்காக, தற்போதுள்ள பிக்குக் கல்வி நிறுவனங்களுக்குப் புறம்பாக இப்பணிக்ளுக்கே ஒதுக்கப்பட்டதான பிக்குக் கல்வி நிறுவனங்களை உருவாக்குவதற்கான முறையியலொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.114/ '10

கௌரவ புத்திக பதிரண,— இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள நொத்தாரிசு சேவையை இற்றைப்படுத்துதல்,— இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள நொத்தாரிசு சேவை காலங்கடந்த சட்டங்களைக் கொண்டுள்ளதால் அது தொடர்பாக மீள பரிசீலனை செய்து தற்காலத்திற்குப் பொருத்தமானவாறு சட்டங்கள் ஆக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.115/ '10

கௌரவ புத்திக பதிரண,— உலர் வலய சேனைப் பயிர்செய்கையாளர்களின் பொருளாதாரத்தை வலுவூட்டுதல்,— உலர் வலயங்களில் சேனைப் பயிர்செய்கையாளர் களால் பயிரிடப்படுகின்ற நெல், குரக்கன், பயறு, எள்ளு ஆகிய பயிர்களின் விளைச்சலை அதிகரிப்பதற்கும் உற்பத்திப் பொருட்களை பதனிடுவதற்கும் ஏதுவான வகையில் புதிய தொழிட்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம் தரச்சிறப்புவாய்ந்த வகையில் உற்பத்திகளை பதனிடுவதற்கும், உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளில் உற்பத்திகளை சந்தைப்படுத்தும் நடவடிக்கையை வலுவூட்டுவதற்கும் வரையறுக்கப்பட்ட கூட்டுறவு கம்பனிகள் தாபிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.116/ '10

கௌரவ புத்திக பதிரண,— ஆசிரியர் ஆலோசனை சேவையை உருவாக்குதல்,— இலங்கையில் கல்வித் தரத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கத்தோடு இற்றைக்கு சுமார் இருபது (20) வருடங்களுக்கு முன்னர் தொட்டு ஆரம்பமாகி நடைமுறையிலிருக்கும் ஆசிரியர் ஆலேசானை சேவையை தனியானதொரு சேவை அலகாக தாபிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.117/ '10

கௌரவ ருவண் ரணதுங்க,— உப பிரிவாக்கல் தடை செய்யப்பட்டுள்ள அரசாங்க அளிப்பு பத்திர காணிகளின் உப பிரிவாக்கல் அதிகாரத்தை பிரதேச செயலாளர்களிடம் ஒப்படைத்தல்,— ஜய பூமி, சுவர்ண பூமி,ரத்ன பூமி ஆகிய அரசாங்கக் காணி அளிப்புப் பத்திரங்களைக் கொண்டுள்ளவர்களின் காணிகளில் உப பிரிவாக்கல் தடை செய்யப்பட்டுள்ளதெனினும், ஆரம்பக் காணி பெற்றவர்களின் இரண்டாம் பரம்பரையின் உரிமையை உறுதி செய்வதற்கும் அவர்களின் வீடு, தோட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கும் உப பிரிவாக்கலுக்கான தேவை தோன்றும் போது மாகாண ஆணையாளர், காணி ஆணையாளர் மற்றும் ஜனாதிபதி செயலகத்துடனான தற்போது நடைமுறையில் உள்ள நீண்ட செயன்முறையை குறுகியதாக்கி உப பிரிவாக்க அதிகாரத்தை பிரதேச செயலாளர்களிடம் ஒப்படைப்பதற்கு தேவையான சட்டங்கள் ஆக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.118/ '10

கௌரவ புத்திக பதிரண,— கோதுமை மாவிற்குப் பதிலாக அரிசி மாவை மக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்துவதற்காக புதிய தொழில் நுட்பத்தை அறிமுகப்படுத்துதல்,— கோதுமை மாவிற்காக வெளிநாடுகளுக்கு வெளிப் பாய்ச்சப்படும் பெருமளவு செலாவணியை நிறுத்தும் நோக்கத்துடன், மாற்றீடாக பயன்படுத்தக்கூடிய அரிசி மாவினால் தயாரிக்கப்படும் உணவை பிரபல்யப்படுத்துவதற்கும், நார்த்தன்மை கொண்ட தானிய வகையான அரிசியை மிகவும் மென்மையானதாக கோதுமை மாவைப் போன்று அரைப்பதற்கும், கோதுமை மா அரைப்பதற்கு பயன்படுத்தப்படுவதைப் போன்ற இயந்திர உபகரணங்களையும் புதிய தொழில்நுட்பத்தையும் அறிமுகப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.119/ '10

கௌரவ புத்திக பதிரண,— யுத்தத்தால் அங்கவீனமுற்றவர்களுக்கு நிவாரணம் வழங்குதல்,— ஏறக்குறைய 30 வருடகாலமாக நடைபெற்ற யுத்தம் காரணமாக அன்றாடம் நாட்கூலிக்கு வேலை செய்து வாழ்ந்த மக்கள் மற்றும் நிரந்தர தொழில் புரிந்த மக்கள் மத்தியில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையானோர் உடலுறுப்புக்களை இழந்து அங்கவீனர்களாக வாழ்க்கைச் சுமையினால் பெரும் பாதிப்புக்குள்ளாகி நிர்க்கதியான நிலையில் வாழ்வதால், அவர்களுக்கு மாதாந்த கொடுப்பனவொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.120/ '10

கௌரவ புத்திக பதிரண,— உயர் பிரமுகர்களின் பாதுகாவலர்கள் அனைவருக்கும் பிரயாணச் செலவுக் கொடுப்பனவொன்றை வழங்குதல்,— ஜனாதிபதி பாதுகாப்புச் சேவை மற்றும் பிரதம அமைச்சர் பாதுகாப்பு சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களைப் போன்று ஏனைய உயர் பிரமுகர் பாதுகாப்பு சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கும் சமமான பிரயாணச் செலவுக் கொடுப்பனவொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.122/ '11

கௌரவ ருவன் ரணதுங்க,— அரசாங்க வங்கிகளின் வட்டி செலுத்துதலுக்கும் வட்டி அறவிடலுக்கும் இடையே காணப்படுகின்ற வித்தியாசத்தைக் குறைத்தல்,— அரசாங்க வங்கிகளில் சாதாரண வைப்புகளுக்கு செலுத்தப்படுகின்ற வட்டி விகிதம் 4 % முதல் 4.5 % வரையிலும் நிலையான வைப்புகளுக்கு செலுத்தப்படுகின்ற வட்டி விகிதம் சுமார் 8 % ஆகவும், வங்கிகளால் வீடமைப்பு, வர்த்தகம் மற்றும் விவசாயக் கடன்களுக்கு அறவிடப்படுகின்ற வட்டி விகிதம் சுமார் 12% முதல் 13% வரையிலும் உள்ளதால், மக்களுக்கும் சிறிய அளவிலான வர்த்தகர்களுக்கும் கைகொடுப்பதற்கும் அவர்களை ஊக்குவிப்பதற்குமாக, இவ்வாறு அறவிடப்படுகின்ற வட்டிக்கும் செலுத்தப்படுகின்ற வட்டிக்கும் இடையிலான வித்தியாசத்தைக் குறைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.123/ '11

கௌரவ ருவன் ரணதுங்க,— பட்டதாரி கிராம உத்தியோகத்தர்களை கௌரவிப்பதற்கான ஒரு கொடுப்பனவைச் செலுத்துதல்,— அரசாங்க சேவையை கிராமிய மட்டத்தில் மக்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்காக சேவையாற்றுகின்ற கிராம உத்தியோகத்தர்கள் க.பொ.த. (உ/த) பரீட்சையின் பின்னர் போட்டிப் பரீட்சையின் புள்ளிகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள போதிலும், தற்போது சேவையாற்றி வருகின்ற கிராம அலுவலர்களில் சுமார் 30 % முதல் 40 % வரையிலானோர் பட்டத் தகைமைகளைப் பெற்றுள்ளனராதலாலும், இதற்கென எவ்வித விசேட கவனமும் இதுவரை செலுத்தப்படாதுள்ளதனாலும், பட்டத் தகைமையை கௌரவிக்கு முகமாக பட்டதாரி கிராம அலுவலர்களுக்கு சம்பள அதிகரிப்பு அல்லது கொடுப்பனவொன்றை வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.124/ '11

கௌரவ ருவன் ரணதுங்க,- கல்விசார் நூல்கள் தவிர்ந்த தினசரி பத்திரிகைகளிலும் வாராந்த சஞ்சிகைகளிலும் புத்தர் பெருமானின் உருவப் படங்கள் பிரசுரிக்கப்படுவதை தடைசெய்தல்,- தினசரி பத்திரிகைகள் மற்றும் வார சஞசிகைகளில் புத்தர் பெருமானின் உருவப் படங்களும் சிலைகளின் படங்களும் எதுவித கட்டுப்பாடுமின்றி எல்லையற்ற வகையில் அச்சிடப்படுவதோடு அந்த அட்டைகள் பல்வேறுபட்ட பொருட்களின் உறைகளாகவும் வேறு பொருத்தமற்ற அலுவல்களுக்காகவும் பயன்படுத்தப்படுவது புத்தர் பெருமானுக்குச் செய்கின்ற அவமரியாதையாகுமென்பதால் 2600 ஆம் புத்தர் ஜெயந்தி கொண்டாட்டத்தையும் கருத்திற்கொண்டு இதன் பின்னர் கல்விசார் நூல்கள் தவிர்ந்த தினசரி பத்திரிகைகளிலும் வாராந்த சஞ்சிகைகளிலும் புத்தர் பெருமானின் உருவப் படங்கள் பிரசுரிக்கப்படுவதை தடைசெய்வதற்குத் தேவையான சட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.126/ ' 11

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— மும்மொழி பேசப்படும் இலங்கைக்காக "சகோதர பாடசாலை நிகழ்ச்சித்திட்டம்" ஒன்றைத் தாபித்தல்,— மும்மொழி பேசப்படும் இலங்கைக்கான பத்தாண்டு தேசிய மூலோபாயச் சட்டகம் ஒன்றை வகுத்தலானது, தேசிய ஒருங்கிணைப்புக்கும் சமூக ஒற்றுமைக்குமான ஒரு திருப்புமுனை நடவடிக்கையாக அமையுமெனவும் எனவே சிங்கள மொழிபேசும் மக்கள் பெரும்பான்மையாக உள்ள பிரதேசங்களில் குறுகிய கால வளமளித்தல் நிழ்ச்சித்திட்டங்களின் வாயிலாக தமிழ் மொழிமூலப் பாடசாலைகளுடன் "சகோதர பாடசாலை நிகழ்ச்சித்திட்டம்" ஒன்றில் மாணவர்களையும் ஆசிரியர்களையும் பறிமாறிக்கொள்வதற்காக ஒவ்வொரு பாடசாலைகளிடையே தொடர்பை ஏற்படுத்துவதற்கு கல்வி அமைச்சும் தேசிய மொழிகள், சமூக ஒருங்கிணைப்பு அமைச்சும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.127/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— காலி சர்வதேச விளையாட்டரங்கிற்கு மீள் பெயரிடுதல்,— இலவசக் கல்வியின் தந்தை காலஞ்சென்ற கௌரவ (கலாநிதி) சீ. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கர அவர்களுக்கு மரியாதை செலுத்தும் முகமாக காலி சர்வதேச விளையாட்டரங்கிற்கு அவரின் பெயரை சூட்டவேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.128/ '11

கௌரவ அஜித் குமார,— முன் பிள்ளைப் பருவக் கல்வி தொடர்பில் தேசிய திட்டமொன்றை உருவாக்குதல்,— எமது நாட்டில், பிள்ளைகளின் கல்வியில் முக்கிய இடம் வகிக்கும் முன் பிள்ளைப் பருவக் கல்வியை (முன்பள்ளிக் கல்வி) வழங்குவது தொடர்பில் தேசிய திட்டமொன்றை தயாரிக்கவேண்டியுள்ளதுடன், முன் பள்ளி நிர்வாகிகளுக்கு முறையான பயிற்சியும், ஆட்சேர்ப்பு முறைமையுடன் சம்பள முறையொன்றும் தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.129/ '11

கௌரவ அஜித் குமார,— காலி மாவட்டத்தின் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் பற்றிய ஆய்வு நூலொன்றைத் தயாரித்தல்,— காலி மாவட்டத்தின் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த, தொல்பொருளியல் மற்றும் கலாசார ரீதியில் பெறுமதி வாய்ந்த இடங்கள் பற்றிய பரந்த ஆய்வினை மேற்கொண்டு, அது தொடர்பில் அறிவியல் பெறுமதிமிக்க ஆய்வு நூலொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.130/'11

கௌரவ ரவி கருணாநாயக்க,— தேர்தல் நடைமுறைகள் மற்றும் தேர்தல்களை நடாத்துதல் பற்றிய பாராளுமன்றத் தெரி குழுவொன்றை நியமித்தல்,— தேர்தல் நடைமுறைகள் மற்றும் தேர்தல்களை நடாத்துதல் பற்றிய பாராளுமன்றத் தெரிகுழுவொன்று நிரந்தர அடிப்படையில் நியமிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.131/'11

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் ஆகிய நிதியங்களிலிருந்து பணம் உடனடியாக செலுத்துதல்,— ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் ஆகியனவற்றுக்கு பங்களிப்புச் செய்கின்ற சகல அங்கத்தவர்களுக்கு செலுத்த வேண்டிய தொகைகள் செயல்படுநிலைத் தொழிலிருந்து ஓய்வு பெற்று ஒரு மாத காலத்தின் பின்னர் அவர்களுக்கான நிலுவைகள் செலுத்தப்படுவதற்கான ஏற்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.132/'11

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரச ஊடகங்களில் பக்கச் சார்பற்ற தன்மையை உறுதிப்படுத்தல்,— அரச ஊடகங்கள் இலங்கைப் பிரசைகளின் விசேட உரிமையாக இருப்பதாலும், அரச ஊடகங்கள் தொடர்ச்சியாக அரசியல்மயப்பட்டு இருப்பதாலும், இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள சகல அரசியல் கட்சிகளுக்கும் அரச ஊடகங்களில் சமமாக நடதப்பட்டு சம வாய்ப்புகள் உறுதிப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.133/'11

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரச சேவையில் மொழித் தேர்ச்சியின் தேவைப்பாடுகள்,— 2025 ஆம் ஆண்டளவில் சகல அரச சேவை ஊழியர்களும், தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் கருமங்களை ஆற்றக் கூடியவர்களாகவும் கடிதப் பரிமாற்றல் மூலம் பணியாற்றுவதற்கும் பேசுவதற்கும் இயலுமையுடையவர்களாக இருப்பதை அரசாங்கம் கட்டாயமாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.134/'11

கௌரவ ரவி கருணாநாயக்க,— பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீட்டினை வழங்குதல்,— இப்பாராளுமன்றத்தின் 225 உறுப்பினர்களும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 1%ற்கு சமமாகின்ற பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்ட ஒதுக்கீட்டிற்கு வருடாந்த அடிப்படையில் உரித்துடையவர்களாகவேண்டுமென்றும் மேலும் இந்த ஒதுக்கீடானது 50% மூலதனச் செலவின்மீது பயன்படுத்தப்படல் வேண்டுமென்றும் எஞ்சியுள்ளவை தனது வாக்காளர்களின் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் விரும்புகின்றதும் அரசாங்கத்தின் வழிகாட்டலை அடிப்படையாகக் கொண்டதுமான எவ்வடிப்படையிலும் செலவழிக்கப்படலாமென்றும் இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.138 / 11

கௌரவ புத்திக பத்திரன,— பல்கலைக்கழகங்களால் நடாத்தப்படுகின்ற கற்கை நெறிகளை தொழில்மையக் கற்கைநெறிகளாக ஆக்குதல்,— நாட்டின் அனைத்து அரசாங்க பல்கலைக்கழகங்கள் மற்றும் தனியார் பல்கலைக்கழகங்களால் நடாத்தப்படுகின்ற கலைக் கல்விகளுக்கான பட்டப்படிப்பு கற்கைநெறிகளை தொழில்மையக் கற்கைநெறிகளாக மாற்றி அதன் மூலமாக உருவாகின்ற பட்டதாரிகளுக்கு புதிய தொழில்வாய்ப்புகளை வழங்கும் நோக்கத்துடன், அனைத்துப் பல்கலைக்கழகங்களுடன் அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களை இணைப்பதற்கான முறைசார்ந்த வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.139/'11

கௌரவ புத்திக பத்திரண,— பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்கின்ற வான்களுக்கான தரநியமங்களை விதித்தல்,— நாடு பூராவும் நடாத்தப்படுகின்ற பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்துச் சேவைகள் உரிய தரத்தில் இல்லாமையினாலும், சில பாடசாலை வான்களின் ஊழியர்களது நடத்தை சிறந்ததாக இல்லாமையினாலும், உரிய தரநியமங்களுடன் கூடிய வான் சேவையொன்றை நடாத்துவதற்காகவும், மேற்படி சேவையைப் பெறுகின்ற பாடசாலை மாணவ மாணவிகளது பாதுகாப்பை உறுதி செய்வதற்காகவும் வான் சேவைகளுக்கான தரநியமங்களை அறிமுகப்படுத்துதல் வேண்டுமெனவும், வான் ஊழியர்களிடையே சிறந்த பழக்க வழக்கங்களைப் பேணிவருவதற்காக ஒழுக்க நெறிக் கோவையொன்றை அறிமுகப்படுத்துதல் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.140/'11

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— தெங்குக் கமத்தொழில், தெங்கு சார் வளங்கள் ஆகியவற்றின் அபிவிருத்தியையும் மேம்பாட்டையும் ஒழுங்கமைத்தல்,— வர்த்தக ரீதியான உற்பத்திகளில் தென்னை முக்கிய இடத்தை வகிப்பதால், வளங்களையும், சுற்றாடலையும் நிலைத்து நிற்கச் செய்கின்ற அதேவேளை, நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு குறிப்பிடக்கூடியளவு பங்களிப்புச் செய்யக்கூடிய விதத்தில் வளர்ச்சியடையும் அபிவிருத்தியை ஒழுங்கமைத்து தென்னைக் கைத்தொழில் மற்றும் தென்னை சார் வளங்கள் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கு அர்த்த புஷ்டியுள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.141/'11

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— கித்துள் கைத்தொழிலை மேம்படுத்து முகமாக கித்துள் பயிர்ச்செய்கையை அதிகரித்தல்,— கிராமிய பிரதேசங்களில் கித்துள் பாரியளவு பங்களிப்பை வழங்குவதால், கிராமியக் கைத்தொழிலுக்கும் கிராமிய மக்களுக்கும் ஊக்கமளித்து தாவர உணவிற்காக வளர்க்கப்படும் கித்துள் மரங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும் என்னும் எமது குறிக்கோள் திட்டத்திற்கு அமைவாக புதிய கித்துள் பயிர்ச்செய்கைகளை அதிகரிப்பதற்கான தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.142/'11

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— இலங்கையைச் சூழ மாசற்ற கடல்சார் சுற்றாடலை உறுதிப்படுத்தல்,— 2020 ஆம் ஆண்டளவில் ஸ்திரத்தன்மை மிக்க தேசிய அபிவிருத்திக்காகவும் இலங்கை மக்கள் மற்றும் அதன் பொருளாதாரம் ஆகியவற்றின் நலனுக்காகவும் இலங்கையைச் சூழ மாசற்ற கடல்சார் சுற்றாடலை உறுதிப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.143/'11

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கையை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தல்,— மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கை மற்றும் அதனோடு தொடர்புடைய உற்பத்திகளின் பதனிடல், சந்தைப்படுத்தல் மற்றும் பயிர்ச்செய்கை ஆகியவற்றுக்கான உதவிகளை நல்கி அதன்மூலம் தரமான பெறுமதி சேர்க்கப்பட்ட மரமுந்திரிகையை உற்பத்திகளின் முன்னணி ஏற்றுமதி உற்பத்தியாளர் மற்றும் ஏற்றுமதியாளராக இலங்கையை திகழச் செய்வதற்கு உதவக்கூடிய விதத்தில் மரமுந்திரிகைச் செய்கையை அபிவிருத்தி செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.144/'11

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— பாரம்பரிய கைத்தொழில்களை அபிவிருத்தி செய்தல்,— அம்பாறை மாவட்டத்தில் அருகி வரும் பாரம்பரிய கைத்தொழில்களான கைத்தறித் தொழில், மட்பாண்டம் தயாரித்தல், பனை ஓலை மற்றும் பன்கொண்டு பெட்டி, தண்டு மற்றும் பாய் போன்றவற்றை இழைத்தல், தும்புத் தொழில், பிரம்புத் தொழில் ஆகியவற்றை அபிவிருத்தி செய்து அப்பகுதி மக்களுக்கு தொழில்வாய்ப்புக்களை ஏற்படுத்தி அவர்களின் வருவாயைப் பெருக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.146/11

கௌரவ திலங்க சுமதிபால,— ஆயுத விற்பனைக்கான முறைசார்ந்த கட்டுப்பாட்டு முறையொன்றைத் தாபித்தல்,— சர்வதேச ரீதியில் எவ்வித கட்டுப்பாடுமின்றி ஆயுத விற்பனை நடைமுறையிலுள்ளதன் விளைவாக இலங்கை போன்ற நாடுகளுக்கு ஆயுதங்கள் வந்து குவிதல் மற்றும் அவ்வாறான நாடுகளில் இடம்பெறும் முறைசாராத ஆயுதச் சுற்றோட்டமானது சமூகத்தின் சுதந்திரத்திற்கு பாரிய தடையாகவும் சனநாயக ரீதியில் அதிகாரத்திற்கு வந்த அரசாங்கத்திற்கு அச்சுறுத்தலாகவும் தாக்கம் ஏற்படுத்துவதாகும், அத்துடன் நாட்டில் போதைப்பொருள் மற்றும் விபச்சாரத் தொழில் போன்ற சட்டவிரோதச் செயல்கள் விரிவடைவதற்கு காரணமாகவும் அமைந்துள்ளது. மேற்படி நிலைமைகளைத் தடுத்து ஒழுக்கம் பேணுகின்ற, சட்டத்தை மதிக்கின்ற, விழுமியங்கள் நிறைந்த சமுதாயமொன்றைக் கட்டியெழுப்புதல் மஹிந்த சிந்தனை எதிர்கால நோக்கின் எதிர்பார்ப்பாக உள்ளதாலும், ஆயுத விற்பனை உடன்படிக்கைகளை நடைமுறைப்படுத்துவதனூடாக சமூக போராட்டங்களைக் குறைத்து சமூக நலனோம்புகையை உறுதி செய்தல் இன்றைய உலகின் எதிர்பார்ப்பாகவுள்ளதாலும், மேற்குறிப்பிட்ட துர்நடத்தைகளை ஒழிப்பதற்காக சர்வதேச உடன்படிக்கைகள் மற்றும் சமவாயங்களுக்கு ஏற்புடையதாக தேசிய சட்ட முறைமையொன்று தாபிக்கப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.147/11

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— பேரிச்சம் பழச் செய்கையை அறிமுகப் படுத்துவற்குரிய வாய்ப்புகள் பற்றி விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்படுதல்,— மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள காத்தான்குடியில் பரீட்சார்த்தமாகப் பயிர் செய்யப்பட்ட பீனிக்ஸ் டெக்லிபெரா *(Phoenix dactylifera)* என்ற பேரிச்சம் பழச் செய்கை வெற்றியளித்துள்ளதால், எமது சொந்த மண்ணில் வளர்ந்த நற்சுவைமிக்க இப் பழத்தை சுவைப்பதற்கான வாய்ப்புகள் எமது நாட்டு மக்களுக்கும் கிடைக்கக்கூடியவாறு இப் பேரிச்சம் பழச் செய்கையை எமது நாட்டிலும் அறிமுகப்படுத்துவதற்குரிய வாய்ப்புகள் பற்றி விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இச்சபை கருதுகிறது.

பா.151/'11

கௌரவ ரவி கருணாநாயக்க,— வானோலி ஒலிபரப்பை ஒழுங்குபடுத்தல்,— வானொலி ஒலிபரப்பை ஒழுங்குபடுத்தும் ஒரு சுயாதீன அதிகார சபையை கூட்டிணைப்பதற்கான சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.152/'11

கௌரவ ரவி கருணாநாயக்க,— தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் ஒளிபரப்பை ஒழுங்குபடுத்தல்,— தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் ஒளிபரப்பை ஒழுங்குபடுத்தும் ஒரு சுயாதீன அதிகார சபையை கூட்டிணைப்பதற்கான சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.153/'11

கௌரவ ரவி கருணாநாயக்க,— மாநகர சபைகளில் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவை அறிமுகம் செய்தல்,— 2013 சனவரி 1 ஆம் திகதியளவில் சகல மாநகர சபைகளிலும் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவைத் தாபிப்பதற்கான சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.154/'11

கௌரவ ரவி கருணாநாயக்க,— உரிமைகள் பிரகடனச் சட்டமூலத்தைச் சட்டமாக்குதல்,— தென்னாபிரிக்காவில் மனித கண்ணியம், சமத்துவம் மற்றும் சுதந்திரம் ஆகியவற்றின் ஜனநாயக விழுமியங்களை உறுதிப்படுத்தி, ஜனநாயகத்தின் ஆதாரமாகத் திகழ்கின்ற உரிமைகள் பிரகடனச் சட்டத்தை அடியொற்றி, சட்டமூலத்தில் விதித்துரைக்கப்பட்ட வரையறைகளுக்கு அமைவாக அரசினால் மதித்து, பாதுகாத்து, மேம்படுத்தி நிறைவேற்றப்பட்ட வேண்டிய நாட்டின் எல்லா மக்களினதும் உரிமைகளை உறுதிப்படுத்தும் சட்டமூலம் இலங்கையில் சட்டமாக்கப்பட வேண்டும் இந்தப் பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.155/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு விசேட படிகள் கொடுப்பனவு,— அரச சேவைகள் ஆணைக்குழு மற்றும் சம்பளங்கள் பதவியணி ஆணைக்குழு ஆகியவற்றினால் அங்கீகரிக்கப்பட்டு பாராளுமன்றத்தில் கொண்டுவரப்படாதவிடத்து அமைச்சர், பிரதி அமைச்சர் அல்லது பாராளுமன்ற உறுப்பினர் எவருக்கும் எந்த வகையான விசேட படிகளும் வழங்கப்படக் கூடாது என இப் பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.158/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— இலங்கையில் துறைமுகங்களை அபிவிருத்தி செய்தல்,— இலங்கை புவியியல் ரீதியாக மையப் பகுதியில் நன்கு அமையப்பட்டிருப்பதாக அறியப்பட்டிருந்ததாலும், பண்டைக் காலங்களிலிருந்த கடற்போக்குவரத்து என்பது ஒரு மிக முக்கியமான சேவைத் துறையாக இருந்து வருவதனாலும், அத்துடன் இந்தியா அதன் துறைமுகங்களை மிகுந்த ஆர்வத்துடன் அபிவிருத்தி செய்து மேம்படுத்தி வருகின்ற காரணத்தினாலும் நாம் இந்தியாவுடனும் இந்திய வியாபாரத்துடனும் அணிசேர்ந்து இரண்டு நாடுகளினதும் நன்மைக்காக துறைமுகங்களை அபிவிருத்தி செய்ய வேண்டும் என இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.